# மன்னா

## மன்னார் மறைமாவட்ட

# மேய்ப்புப் பணித் திட்டமிடல் மாநாடு - 2018

### அடுத்த வருடம் :

## ‘தூய யோசவ்வாஸ் அர்ப்பண ஆண்டு - II’

### மேய்ப்புப் பணிக்கான மையப்பொருள் :

## “பொதுநிலையினரின் அழைப்பும் பணிகளும் உருவாக்கமும்”







2018ஆம் ஆண்டிற்கான மன்னார் மறைமாவட்ட மேய்ப்புப்பணித் திட்டமிடல் மாநாடு கடந்த நவம்பர் மாதம் 17ஆம் திகதி மாலை 5.00 மணி தொடக்கம் 18ஆம் திகதி மாலை 3.00 மணிவரை மன்னார் குடும்பப்பணி நிலையத்தில் இடம்பெற்றது. இதில் மன்னார் மறைமாவட்டத்தில் பணியாற்றும் அனைத்துக் குருக்களும் துறவற சபைகளின் பிரதிநிதிகளும் பங்குகள் மற்றும் ஆணைக்குழுக்களின் பிரதிநிதிகளுமாக 185 பேர் பங்கெடுத்தனர். அடுத்த வருடமும் தூய யோசவ்வாஸ் ஆண்டைத் தொடரும்முகமாக “தூய யோசவ்வாஸ் அர்ப்பண ஆண்டு - II’ என்பது அடுத்த ஆண்டுக்கான பொதுத் தலைப்பாக இருக்கும். அதேவேளை தூய யோசவ்வாஸ் அடிகளாரின் பணிவாழ்வில் பொதுநிலையினர் முக்கிய இடத்தைப் பெறுவதால் அடுத்த ஆண்டில் பொதுநிலையினரைப் மையப்படுத்தியதாக “பொதுநிலையினரின் அழைப்பும் பணிகளும் உருவாக்கமும்” என்ற சிறப்பு மையப்பொருள் மேய்ப்புப் பணி நடவடிக்கைகளின் மையமாக அமைந்திருக்கும். (தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## நீத்தாரை நினைக்கும் கார்த்திகை மாதம்



காத்திகை மாதம் நீத்தாரைச் சிறப்பாக நினைவுகூர்ந்து செபிக்கும் மாதம். நமது குடும்பத்தவர்கள், உறவுகள், நண்பர்கள் மட்டுமல்ல யாரும் நினையாத ஆன்மாக்களையும் நினைந்து அவர்களுக்காகவும் சிறப்பாக செபிப்போம்!

## நெடுங்கேணி கிறிஸ்து அரசர் ஆலயத் திருப்பொழிவும் திறப்பு விழாவும்








மன்னார் மறைமாவட்டத்தின் கனகராயன் குளம் பங்கிற்கு உட்பட்ட நெடுங்கேணிக் கிராமத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கிறிஸ்து அரசர் ஆலயமானது கடந்த ஒக்ரோபர் மாதம் 15ஆம் திகதி மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களால் ஆசீர்வதித்துத் திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. விக்ரர் சோசை அடிகளார் உட்பட பல குருக்கள், கன்னியர், பொதுமக்கள் கலந்து சிறப்பித்தனர். கனகராயன் குளம் பங்குத்தந்தை அருட்திரு. வென்ஸஸ்லோஸ் அடிகளார் இந்நிகழ்வுகள் அனைத்தையும் சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தார்.

## மன்னா பத்திரிகையை இப்போது இணையத் தளத்திலும் பார்வையிடலாம்




மன்னா பத்திரிகையை இப்போது நீங்கள் இணையத்தளத்திலும் பார்வையிடலாம். அதைவிட மன்னார் மறைமாவட்டச் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ளவும் இன்னும் மறைமாவட்டம் தொடர்பான ஏனைய விடயங்களை அறிந்துகொள்ளவும் இந்த இணையத் தளத்திற்குள் சென்று நீங்கள் பார்வையிடலாம்.

## கட்டைக்காடு பங்கில் புதிய பங்குமனை திறப்பு







மன்னார் மறைமாவட்டத்தின் புதிய பங்குகளில் ஒன்றான கட்டைக்காடு பங்கின் புதிய பங்குப் பணிமனை கடந்த ஒக்ரோபர் மாதம் 25ஆம் திகதி மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கலாநிதி கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களினால் ஆசீர்வதித்துத் திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி விக்ரர் சோசை அடிகளாரும் இன்னும் பல குருக்கள், துறவியர் பொதுமக்கள் இணைந்து இந்நிகழ்வினைச் சிறப்பித்திருந்தனர். கட்டைக்காடு பங்குத்தந்தை அருட்திரு. டெஸ்மன் குலாஸ் அடிகளார் நிகழ்வுகள் அனைத்தையும் சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தார்.

### ஒய்வுநிலை ஆயர் யோசேப்பு ஆண்டகைக்கு

## திருத்தந்தை பிரான்சிஸ் வாழ்த்து





மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வுநிலை ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்களுக்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வாழ்த்துச் செய்தியை அனுப்பியுள்ளார். அதில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

வணக்கத்திற்குரிய சகோதரர் இராயப்பு யோசேப்பு அவர்களுக்கு, ஆயர் திருப்பொழிவின் வெள்ளி விழாவையும், குருத்துவத் திருப்பொழிவின் பொன்விழாவையும் காணும் ஓய்வுபெற்ற மன்னார் ஆயருக்கு எமது ஆன்மீக ஒத்துழைப்பை வெளிப்படுத்துகின்றோம். அவருடைய நீண்டகால, விறுவிறுப்பான அப்போஸ்தலிக்க பணிகளை நினைவுகூர்ந்து புனித பேதுருவின் திருப்பீட ஆட்சியதிகாரத்தை முன்னிட்டு ஆயருக்கும், அவரைச் சார்ந்தவர்களுக்கும் எமது அப்போஸ்தலிக்க ஆசீரையும், செபங்களையும் வழங்குகிறோம்.

- திருத்தந்தை பிரான்சிஸ் - வத்திக்கான், 4, ஒக்ரோபர், 2017

## மாவீரர் நாள் - காத்திகை 27







ஈழத்தமிழ் மக்களின் விடுதலைக்காய் தம் இன்னுயிரைத் தியாகம் செய்த அனைத்துப் போராளிகள் மற்றும் பொதுமக்களை எம் நெஞ்சில் இருத்தி அஞ்சலி செய்வோம்!


### 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் மன்னார் மாவட்டத்தில்
# முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள்



முதலாம் இடம்
நயோலன் அபிஷேக்



இரண்டாம் இடம்
ஞானசேகர் மெல்கிதன்



மூன்றாம் இடம்
சதீஸ்குமார் லக்ஷாயினி

2017ஆம் ஆண்டிற்கான 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் மன்னார் மாவட்டத்தில் முதல் இடத்தை மன்/ புனித சவேரியார் ஆண்கள் தேசிய கல்லூரியைச் சேர்ந்த மாணவன் செல்வன் குபேரக்குமார் நயோலன் அபிஷேக் அவர்கள் பெற்றுள்ளார். இவர் பெற்றுக்கொண்ட புள்ளிகள் 191 ஆகும். இவர் மன்னார் மாவட்டம், வன்னி தொகுதி ஆகியவற்றில் 1வது இடத்தினையும், வடமாகாணத்தில் 3வது இடத்தினையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மன்னார் மாவட்டத்தில் இரண்டாம் இடத்தை மன்/ கட்டையடம்பன் றோ.க.த பாடசாலையைச் சேர்ந்த மாணவன் செல்வன் ஞானசேகர் மெல்கிதன் அவர்கள் பெற்றுள்ளார். இவர் பெற்றுக்கொண்ட புள்ளிகள் 187ஆகும். மன்னார் மாவட்டத்தில் மூன்றாம் இடத்தை மன்/ சித்திவிநாயகர் இந்துக் தேசிய கல்லூரியைச் சேர்ந்த மாணவி செல்வி சதீஸ்குமார் லக்ஷாயினி அவர்கள் பெற்றுள்ளார். இவர் பெற்றுக்கொண்ட புள்ளிகள் 184 ஆகும்.

5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற இந்த மாணவர்களையும், சித்திபெற்ற எல்லா மாணவர்களையும் இவர்களை ஆயத்தம் செய்த பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் மன்னா வாழ்த்திப் பாராட்டுகின்றது.

### மன்னார் மறைமாவட்ட ஓய்வுநிலை ஆயர்
# மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை
## குருத்துவ வாழ்வில் பொன் விழாக் காண்கிறார்
## (13.12.1967 - 13.12.2017)



மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வுநிலை ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் எதிர்வரும் டிசம்பர் 13ஆம் திகதி தனது குருத்துவ வாழ்வில் 50 பொன்னான வருடங்களை நிறைவுசெய்து பொன்விழாக் காண்கிறார். 1967ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13ஆம் திகதி இவர் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

குருத்துவ வாழ்வில் பொன்விழாக் காணும் ஆயர் அவர்களுக்கு மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர், குருமுதல்வர், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் இன்னும் அனைத்து தமிழ் மக்கள் சார்பாக மன்னா நல்வாழ்த்துக்களையும், செபங்களையும் தெரிவித்து நிற்கின்றது. ஆயர் அவர்களின் உடல், உள, ஆன்மீக நலன்களுக்காக தொடர்ந்து செபிப்போம்.

# கொள்பிங் அமைப்பின் குடும்ப பிரார்த்தனை தின நிகழ்வு



இவ்வாண்டு உலக கொள்பிங் பிரார்த்தனைதின நிழ்வானது கடந்த ஒக்ரோபர் மாதம் 21ஆம் திகதி புனித யோசவ்வாஸ் ஆண்டையொட்டி மடுக்கரை புனித யோசவ்வாஸ் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. 11 கிராமங்களில் இருந்து கொள்பிங் சங்க உறுப்பினர்கள் வருகைதந்து இதில் கலந்து சிறப்பித்தனர்.

கொள்பிங் இயக்குனரும் மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வருமாகிய அருட்திரு. விக்ரர் சோசை அடிகளார், முருங்கன் மறைக்கோட்ட முதல்வர் அருட்திரு. மாக்கஸ் அடிகளார், அளவக்கை பங்குத்தந்தை அருட்திரு. சுரேந்திரன் றெவல் அடிகளார் ஆகியோர் இணைந்து நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுத்தனர். திருப்பலியைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. தொடர்ந்து மதிய விருந்துடன் இந்நிகழ்வு இனிதே நிறைவுற்றது.

கொள்பிங் அமைப்பானது சில குறிப்பிட்ட பின்தங்கிய கிராமங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆன்மீக செயற்பாடுகள், பொருளாதார முன்னேற்றம், சிறு கைத்தொழில் மேம்பாடு, கல்வி வளர்ச்சிக்கு உதவி செய்தல் போன்ற விடயங்களில் இவ்வமைப்பு ஈடுபட்டு ஓர் உன்னத நோக்கோடு இயங்கி வருவது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## மன்னா வாசகர்களே,

மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாக வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்! எமது பத்திரிகைப் பணிக்கு உங்கள் மேலான ஆதரவை வழங்குங்கள்!

## 81ஆவது அகவையில் ஆயர் கிங்ஸ்லி ஆண்டகை
### தள்ளாத வயதிலும் தளராமல் செயலாற்றும் செயல்வீரர்!



மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் எதிர்வரும் டிசம்பர் 09ஆம் திகதி தமது 81வது அகவையில் காலடி பதிக்கின்றார்.

81வது வயதை நெருங்கும் ஆயர் அவர்கள் இன்றும் உற்சாகமாக, மகிழ்ச்சியாக அப்போஸ்தலிக்க பரிபாலகர் என்ற நிலையில் மறை மாவட்டத்தின் அனைத்துக் கடமைகளையும் செய்து வருகின்றார். தள்ளாத வயதிலும் தளராமல் செயலாற்றும் செயல்வீரர்.

மன்னார் மறைமாவட்ட இறைமக்கள் சார்பாக ஆயர் அவர்களுக்கு பிறந்தநாள் நல்வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவிப்பதில் மன்னா மகிழ்ச்சியடைகிறது. ஆயர் அவர்களின் உடல், உள, ஆன்மீக நலன்களுக்காக தொடர்ந்து செபிப்போம்.

### தேசிய ரீதியிலான விவிலியப் போட்டிகளில்
## மன்னார் மறைமாவட்டம் சாதனை

கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தினால் மறைக்கல்வி நிலையத்தினூடாக கடந்த ஒக்ரோபர் மாதம் 5ஆம் திகதி தேசிய ரீதியிலான விவிலியப் பேச்சு மற்றும் வினாவிடைப் போட்டி கொழும்பு வெஸ்லி கல்லூரியில் நடாத்தப்பட்டது.

கடுமையான போட்டிக்கு மத்தியிலும் மன்னார் மறைமாவட்டத்திற்கு 3 இடங்களைப் பெற்று மாணவர்கள் பெருமையை ஈட்டித்தந்துள்ளார்கள்.

**கீழ்ப்பிரிவு பேச்சுப்போட்டி :**
1ம் இடம்: L.V. எஸ்வின் நிதிஸ்கா, மன்னார் பங்கு

**மேற்பிரிவு பேச்சுப் போட்டி:**
2ம் இடம்: S. லக்சிக்கா மிராண்டா, பேசாலை பங்கு

**மேற்பிரிவு வினாவிடைப்போட்டி குழு :**
2ம் இடம்:
1. S. அனுஸ்ரிக்கா - பேசாலை பங்கு
2. B. றொணிஷா பீரிஸ் - பேசாலை பங்கு
3. R. சுபதர்ஷிக்கா - அடம்பன் பங்கு
4. S. அனுஷியா - அடம்பன் பங்கு
5. S. டல்சிக்கா - அடம்பன் பங்கு

போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கும், பங்கு, மறைக்கோட்ட, மறைமாவட்ட, தேசிய மட்டப் போட்டிகளுக்கு மாணவர்களை ஆயத்தம் செய்த அனைவருக்கும் சிறப்பாக அருட்சகோதரி அனிஸ்ரெலா (அடம்பன்), ஆசிரியை பாஸ்கரன் ஜெனுவி (பேசாலை), ஆசிரியை சியாமா கிறிஸ்தோப்பர் (மன்னார்) ஆகியோருக்கு மன்னார் மறைக்கல்வி நிலையம் தனது பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றது.

## மன்னார் மறைமாவட்டம்
## திருவழிபாட்டு நாட்காட்டி - 2017

### கார்த்திகை

01. அனைத்து புனிதர்களின் பெருவிழா
02. இறந்த விசுவாசிகளின் நினைவு நாள்
06. இறந்த ஆயர்கள், குருக்கள், துறவியர் ஆன்ம இளைப்பாற்றிக்காக புனித செபஸ்தியார் பேராலயத்தில் கூட்டுத்திருப்பலி மாலை 5.00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்படும்.
22. புனித சிசிலியா பாடகர் குழாமினர் விழா
- கிறிஸ்து அரசர் பெருவிழா - கீரிசுட்டான்
26. கிறிஸ்து அரசர் பெருவிழா - முருங்கன், நெடுங்கேணி, சாந்திபுரம், குருமன்காடு.
27. ஈழத் தியாகிகள் தினம்
30. புனித அந்திரேயா திருவிழா - தோட்டவெளி

■ வியாழக்கிழமைகளில் மாலை 4.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை செபவழிபாடு - தோட்டவெளி ஆன்மீக இல்லம்


## ஞானோதயம்
### அக்குவானஸ் பல்கலைக் கல்லூரியுடன் இணைந்த உயர்கல்வி நிறுவனம்

அக்குவானஸ் பல்கலைக் கல்லூரியின் அனுசரணையில் அமலமரித் தியாகிகளின் 'ஞானோதயம்' கல்வி நிறுவனத்தினால் நடாத்தப்படும் **English Diploma.**

**உயர்கல்வி அமைச்சினாலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினாலும் அங்கீகாரம் பெறப்பட்ட கற்கைநெறியாகும்.**

English Diploma : **ஆரம்பம் ஜனவரி 2018.**
**உங்கள் பதிவுகளை டிசம்பர் 2017க்கு முன்பாக மேற்கொள்ளவும்.**

**Course Structure**
A. The Diploma course consists of four stages:
I. Foundation II. Preliminary
III. Intermediate IV. Final

**Course Content**
I. Grammar II. Comprehension
III. Composition IV. Spoken English with conversational practice
V. Literature using selected texts

**A/L க்குப் பின்னார் உங்கள் எதிர்காலக் கற்கைநெறி தொடர்பான சிறந்த தெரிவிற்கு ஓர் அரிய அடித்தளம் .......**

**தொடர்புகளுக்கு : T.P: 0232250173, 076 – 8780550**
**அலுவலக நேரம்: காலை 9.00 - மாலை 5.00 வரை**


## உண்மை உறைக்கும் கமிலஸ்



(நன்றி - தி மெசஞ்சர்)

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்

- மன்னா நிர்வாகம் -

# திருப்பலியில் புகைப்படங்கள் எடுக்க வேண்டாம்

# திருப்பலி ஒரு கேளிக்கை காட்சியல்ல!

## - திருத்தந்தை பிரான்சிஸ் -

திருப்பலி வேளையில் தங்களிடம் உள்ள தொலைபேசியைக்கொண்டு புகைப்படம் எடுப்பதில் கவனம் செலுத்துவோரைக் காணும்போது நான் அதிகம் வேதனை அடைகிறேன் எனத் திருத்தந்தை பிரான்சிஸ் கூறியுள்ளார்.

கடந்த நவம்பர் 8ஆம் திகதி புதனன்று திருப்பலியை மையப்படுத்தி, புதன் மறைக்கல்வி உரை வழங்கிய வேளையில், புகைப்படங்கள் எடுப்பது விசுவாசிகள் மட்டுமல்ல என்றும், அருள்பணியாளர்கள், ஆயர்கள் என்று அனைவரும் இந்தத் தவறைச் செய்துவருகின்றனர் என்று கூறிய திருத்தந்தை, இந்தத் தவறை அனைவரும் உடனடியாக நிறுத்த வேண்டும் என்று விண்ணப்பித்தார்.

திருப்பலியின் நடுவே, பலியாற்றும் அருள்பணியாளர், “இதயங்களை மேலே எழுப்புங்கள்” என்று சொல்கிறாரே தவிர, “தொலைப்பேசிகளை மேலே எழுப்புங்கள்” என்று சொல்வதில்லை என்று சுட்டிக்காட்டிய திருத்தந்தை, திருப்பலி நேரத்தில் ஆண்டவர் மட்டுமே நம் முழுக் கவனத்தையும் பெறவேண்டும் என்று கேட்டுக்கொண்டர்.




### கலையருவியின் ஏற்பாட்டில்

## ஆலயக் கவிகளை தொகுக்கும் முயற்சி

மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள ஆலயங்களில் திருவிழாக்காலங்களிலே பாடப்படும் கவிகளைத் தொகுத்து நூல் உருவில் வெளியிடும் முயற்சியை கலையருவி அமைப்பு ஆரம்பித்துள்ளது.


நமது ஆலயங்களில் நமது முன்னோரால் வாய்ப்பாடமாக பல்லாண்டுகளாகப் பாடப்பட்டு வந்த கவிகளில் பல அவர்களின் இறப்போடு இல்லாமல்போய்விட்டன. எழுத்துருவில் உள்ளவையும் காலப்போக்கில் காணாமல்போகும் ஆபத்து உள்ளது. எனவே ஒவ்வொரு ஆலயங்களிலும் பாடப்படும் கவிகளை அந்த ஆலயத்தின் பெயரோடு ஒரே தொகுப்பாக நூலுருவில் கொண்டு வரும் எமது முயற்சிக்கு பங்குத்தந்தையர்களினதும், பங்கு மேய்ப்புப்பணிச் சபையினரதும் ஒத்துழைப்பை வேண்டிநிற்கின்றோம்.

உங்கள் ஆலயத்தில் பாடப்படும் கவிகளைத் தொகுத்து பங்குத்தந்தையின் ஒப்புதலோடு பங்கின் பெயர், ஆலயத்தின் பெயர், எந்தப் புனிதர் பேரில் கவி எழுதப்பட்டுள்ளது?, அந்தக் கவியை எழுதிய புலவர் பெயர் (தெரிந்தால்) போன்ற விபரங்களுடன், கவிகளை அனுப்பும் நபருடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கத்துடன் கலையருவிக்கு நேரடியாகவோ தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கலாம்.

முகவரி : - இயக்குனர், கலையருவி, பெற்றா, மன்னார்.

### அருட்சகோதரர் ஜெயகாந்தன் அவர்களுக்கு


## சிறந்த அதிபருக்கான விருது



மன்னார் நானாட்டான் பங்கு மகனும் கொழும்பு கிரான்பாஸ் புனித சூசையப்பர் கல்லூரியின் அதிபருமான டிலாசால் சபை அருட்சகோதரர் ஆர். ஜோசப் ஜெயகாந்தன் அவர்கள் இலங்கை கல்வி அமைச்சினால் “பிரதிபா பிரபா 2017” என்னும் சிறந்த அதிபருக்கான விருதைப் பெற்றுள்ளார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் 23ஆம் திகதி கொழும்பில் இந்த விருது வழங்கும் விழா நடைபெற்றது. இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் 47 பாடசாலை அதிபர்கள் இவ்விருதுக்காகத் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். அருட்சகோதரர் ஜெயகாந்தன் அவர்களுக்கு மன்னாவின் நல்வாழ்த்துக்களும் செபங்களும் உரித்தாகுக!

## மன்னார் குருக்களின் கோவாவுக்கான திருப்பயணம்




தூய யோசவ்வாஸ் ஆண்டை முன்னிட்டு மன்னார் மறைமாவட்டக் குருக்கள் 15 பேர் கடந்த ஒக்ரோபர் 9ஆம் திகதி தொடக்கம் 14ஆம் திகதி வரையான ஆறு நாள் திருப்பயணமாக கோவாவுக்குச் சென்று வந்துள்ளனர்.

அருட்தந்தையர்களான எஸ். கே. தேவராஜா, டெஸ்மன் குலாஸ், பெனோ, மக்கஸ், அருள்பிரகாசம், நேசன், சவுல், றொக்சன், செல்வநாதன், சுகுணராஜ், றொஷான், நீக்கிலஸ், அன்ரனி, தயாளன், சாந்தன் ஆகிய 15 குருக்களே இத்திருப்பயணத்தில் இணைந்துகொண்டனர். தூய யோசவ்வாஸ் அடிகளாரோடு தொடர்புடைய இடங்கள், அவர் பிறந்து வளர்ந்த வீடு, ஆலயங்கள் போன்றவற்றையும், இன்னும் கோவாவில் உள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பேராலயங்கள், திருத்தலங்கள் போன்றவற்றையும் இவர்கள் தரிசித்தனர்.

### அருட்திரு. வசந்தகுமார் அடிகளார்

## அமெரிக்கா பயணம்



அருட்திரு. செ. வசந்தகுமார் அடிகளார் கடந்த ஒக்ரோபர் மாதம் 18ஆம் திகதி தனது உயர் கல்வியை மேற்கொள்வதற்காக அமெரிக்கா சென்றுள்ளார். இவர் குடும்ப ஆற்றுப்படுத்தல் துறையில் தனது உயர் கல்வியைக் கற்கவுள்ளார்.

அடிகளாருக்கு மன்னார் மறைமாவட்ட சமூகத்தின் நல்வாழ்த்துக்களையும் செபங்களையும் மன்னா தெரிவித்து மகிழ்கின்றது.

### மன்னார் மறைமாவட்ட

## மரியாயின் சேனையாளர்களின் செபமாலைப் பேரணி

ஆண்டுதோறும் ஒக்ரோபர் மாதத்தில் மன்னார் மரியாயின்சேனைக் கொமிசியத்தினால் முன்னின்று நடாத்தப்படும் செபமாலைப் பேரணியானது மரியன்னைக்கு புகழ் சாற்றும் முகமாகவும், செபமாலைப் பக்தியை வளர்க்கும் நோக்கத்துடனும் முன்னெடுக்கப்படுகிறது. நாம் மரியன்னையின் கரம்பற்றி இயேசுவின் பாதையில் நடக்க ஊக்குவிக்கும் ஒரு சிறந்த நிகழ்வாகவும் இது உள்ளது. செபமாலை மாதமாகிய ஐப்பசித் திங்கள் 7ம் நாளையொட்டி வரும் ஞாயிறு வாரத்தில் இப்பேரணி சேனையாளர்களால் நடாத்தப்படுகின்றது. ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு மறைக்கோட்டத்தில் இப்பேரணியானது நடாத்தப்படுகின்றது. இவ்வாண்டு மன்னார் மறைக்கோட்டத்தில் உள்ள தலைமன்னார் பேசாலைக் கியூரியாக்கள் இணைந்து இச்செபமாலைப்பேரணியை நாடத்தின.

மரியன்னைக்கு புகழ் சாற்றும் இத்திருச்செபமாலைப் பேரணியானது கடந்த 08.10.2017 ஞாயிறு மாலை 3.30 மணிக்கு கீளியன்குடியிருப்பு புனித சவேரியார் ஆலயத்தில் ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்ப வழிபாடு நிகழ்வுகளை மரியாயின் சேனை மறைமாவட்ட ஆன்ம இயக்குநரும் குடும்பநலப் பொதுநிலை நடுநிலையத்தின் இயக்குனருமாகிய அருட்தந்தை எஸ். கே. தேவராஜா அடிகளார் நடாத்தி இப்பேரணியை ஆரம்பித்துவைத்தார். அவர் தமது முன்னுரையில் திருச்செபமாலையின் மகத்துவம் பற்றியும், நாம் செபிக்கும் இத்திருச்செபமாலை கி. பி. 1214இல் தூய தோமினிக் வழியாக அன்னை மரியா திருச்சபைக்கு வழங்கினார் எனவும், நாம் கிறிஸ்துவின் நான்கு மறையுண்மைகளை திருச்செபமாலை வழியாக தியானித்துவந்தால் அன்னையின் பிள்ளைகளாகக் கிறிஸ்துவோடு இணைந்து வாழ வழிசமைத்துதருகிறது என்ற சிறப்பினையும் எடுத்துரைத்தார். இப்பேரணி வழியாக ‘அற்புதச் செபமாலையை அரவணைப்போம், அன்பின் செபமாலையை அகமெங்கும் மரியாவுடன் உரையாடுவோம்” என்று கூறி ஆரம்பித்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து செபமாலைப் பேரணி மிகச்சிறப்பாக ஆரம்பமாகியது. மன்னார், பேசாலை, தலைமன்னார், வவுனியா, வேப்பங்குளம், முருங்கன், தேவன்பிட்டி ஆகிய ஏழு கியூரியாக்களும் அதனைச்சார்ந்த அனைத்துப் பிரசீடியங்களும் தங்கள் சேனைக் கொடிகளுடனும், சீருடையுடனும் அணிவகுத்துச் செல்ல, அவர்களுடன் ஏனைய பொதுநிலையினரும் மாணவ மாணவியரும், குருக்கள், துறவியரும் செல்ல இறுதியில் தலைமன்னார், மன்னார், நெடுஞ்சாலையில் அன்னையின் அழகு இரதம் பவனி வந்தது.

செபமாலை ஆர்ப்பரிப்புக்கள், மரியன்னையின் பாடல்கள் எனப் பக்திப் பரவசமூட்டும் பாடல்களைத் தலைமன்னார், பேசாலைக் கியூரியாக்கள் ஏற்பாடு செய்திருந்தனர். மேலும் இச்செபமாலைப் பேரணிக்கு வருடா வருடம் மக்களின் தொகை அதிகரித்து வருகின்றது. சென்ற ஆண்டுகளைவிட இவ்வாண்டு பல நூற்றுக்கணக்கான தொகை அதிகரித்துக் காணப்பட்டது. இது அன்னையின்மீது மக்கள் கொண்ட பக்திப்பற்றுதலை எடுத்துக்காட்டுகின்றது. இப்பேரணியானது மாலை 5.30 மணியளவில் பேசாலை வெற்றி அன்னையின் ஆலயம் வந்தடைந்தது. தொடர்ந்து மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களின் தலைமையில் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இக்கூட்டுத்திருப்பலியில் மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை விக்ரர் சோசை அடிகளாரும், மேலும் பல அருட்தந்தையர்களும், அருட்சகோதரிகளும் கலந்து சிறப்பித்தனர். பேசாலை ஆலய வளாகம் அன்னையின் பக்தர்களால் நிரம்பி இருந்தமை கண்கொள்ளாக் காட்சியாக பரிமளித்தது.

மரியாயின் சேனை நிறுவுனரின் பெயர்கொண்ட செட்டிகுளம் உதவிப் பங்குத்தந்தையாகிய அருட்தந்தை பிராங்டப் (திருவுளப் பணியாளர் சபை) அடிகளார் மறையுரை நிகழ்த்தினார். நாம் கிறிஸ்துவின் மீட்புத்திட்டத்திலே பங்குகொண்டு இரட்சணியத்தின் பாதையிலே நடக்க, மரியன்னையின் பக்தி பற்றியும் சிறப்பாக மறையுண்மைகளின் சிறப்பும் அதில் பொதிந்துள்ள நிகழ்வுகளையும், நமது வேண்டுதல்களையும் விவரித்து சிறப்புரை வழங்கினார்.

இறுதியில் அன்னையின் திருச்சூருப ஆசீர்வாதம் வழங்கப்பட்டு சிறப்புமிகு பேரணி நிறைவடைந்தது. பேசாலைப் பங்கு மக்களும், கீளியன்குடியிருப்பு பங்கு மக்களும் வருகை தந்த அனைவருக்கும் தாகசாந்தி அளித்து எம்மை பெரிதும் பாராட்டி மகிழ்வித்தனர். செபமாலைப் பேரணியில் குடும்பமாகக் கூடினோம்; குழுவாய் செபித்தோம்; குணமளிக்க வேண்டினோம்; குறை குற்றம் நீங்க மன்றாடினோம்; இந்த மாதத்தில் மட்டுமல்ல இனியென்றும் செபமாலை செபிப்போம், என்ற மகிழ்வுடனும் நம்பிக்கையுடனும் இச்செபமாலைப் பேரணி நிறைவுக்கு வந்தது.

தகவல் :- செயலாளர்

## பேராலயத்தில் மறைபரப்பு ஞாயிறு விழா



உலக மறைபரப்பு ஞாயிறு தினத்தை முன்னிட்டு கடந்த ஒக்ரோபர் 22ஆம் திகதி மன்னார் புனித செபஸ்தியார் பேராலய வளாகத்தில் சிறப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன. மறைபரப்பு ஞாயிறு திருப்பலியைத் தொடர்ந்து மறைபரப்புச் சந்தை இடம்பெற்றது.

பின்னர் மாலை வேளையில் மறைபரப்பு ஞாயிறு கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் சிறப்பு நிகழ்வாக முத்தரிப்புத்துறை பங்குக் கலைஞர்களால் புனித யோசவ்வாஸ் நாட்டுக்கூத்து நாடகம் மேடையேற்றப்பட்டது. பேராலாயப் பங்குத்தந்தை அருட்திரு. பெப்பி சோசை அடிகளார் தலைமையில் இந்நிகழ்வுகள் யாவும் சிறப்பாக நடைபெற்றன.

# வரலாறு படைத்த மன்னார் மைந்தன்

# பி. எஸ். சூசைதாசன் விடைபெற்றார்!

- பேராசிரியர் அ. சூசை ஆனந்தன் -

முன்னைநாள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மன்னார் தொகுதி பாராளுமன்ற உறுப்பினரும், தேசிய ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் புகழ்பெற்றிருந்த பட்டயக் கணக்காளரும், தமிழறிஞரும், தமிழ்த் தேசியத்தை ஆழமாக நேசித்தவருமான திரு. பிலேசியன் சோசை சூசைதாசன் அவர்கள் தமது 83ஆவது வயதில் தமது சொந்த ஊரான வங்காலையில் கடந்த 13.10.2017 அன்று இறைபதம் அடைந்தார்.

அலைகடல் மோதும் வங்காலை மண்ணில் 24.07.1934இல் சாதாரண குடும்பத்தில் பிறந்த இவர், தமது ஆரம்பக் கல்வியை தமது சொந்த ஊரான வங்காலையிலும், இடைநிலைக்கல்வியை எருக்கலம்பிட்டி மத்திய கல்லூரியிலும், பின்னர் யாழ் - கனகரத்தினம் ம.வி. யிலும் (ஸ்டான்லி கல்லூரி) பயின்று பின்னர் தமது பட்டப்படிப்பினை (பீ.ஏ.) கொழும்பிலுள்ள பிரபல்ய உயர்கல்லூரியான அக்குவைனாஸ் கல்லூரியிலும் நிறைவு செய்தார். **"வாழக் கல்"** என்பதற்கொப்ப தமது விடாமுயற்சியினால் இலண்டன் சென்று பட்டயக்கணக்காளர் (Chartered Accountant) தேர்வில் சித்தியடைந்து பட்டயக்கணக்காளராகி பிறந்த மண்ணுக்குப் பெருமை சேர்த்தார். அவரின் கல்விச் சாதனையைப் பாராட்டி அவரது சொந்த ஊரில் அப்போது கௌரவிக்கப்பட்டார். ஆரம்ப காலங்களில் இலங்கையில் '*லங்கா சலுசலா*' போன்ற பல நிறுவனங்களில் கணக்காளராகப் பணியாற்றிய அவர், பின்னர் சம்பியா, நைஜீரியா, சிங்கப்பூர், இலண்டன், கனடா ஆகிய இடங்களிலும் பணியாற்றி அதன்மூலம் பொருளாதார ரீதியில் தம்மை வளப்படுத்திக்கொண்டார்.

அவரது தந்தையார் ஒரு சிறந்த புலவர். **"கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்"** என்பார்கள். தனயனிடமும் அக்கவித்துவம் நிறைந்திருந்தது. பாரதியாரை இவருக்கு மெத்தப் பிடிக்கும். இலக்கிய மேடைகளில் மிக இரசனையோடு பேசுவார். சமய மேடைகளில் சாந்தமாகப் பேசுவார். அரசியல் மேடைகளில் சிம்மக்குரலில் அனல் பறக்கப் பேசுவார். கலை ஆர்வமிக்க இவர், ஊரிலுள்ள வளர்கலை மன்றத்தின் ஓர் அங்கத்தவராவும் இருந்துள்ளார்.

அவர் நிறையவே வாசிப்பதுண்டு. அவர் வீட்டில் ஓர் சிறிய நூல் நிலையம் உண்டு. தமிழ், இலக்கியம், அரசியல், பொருளியல், பைபிள், குர் ஆன், மற்றும் சைவ நூல்களும் அங்கு காணப்பட்டன. பல்துறை சார்ந்த தமிழ் மற்றும் ஆங்கில நூல்களும் நிறையவே காணப்பட்டன. அவரைச் சந்திக்கப் போகும்போது ஏதாவது படித்துக்கொண்டே இருப்பார். இதனாலேயே அவர் பன்முக ஆளுமைகொண்ட ஒருவராக விளங்கினார்.

### அரசியல் பிரவேசம்

திரு. சூசைதாசன் அவர்களை இன்று பலருக்குத் தெரியாதிருக்கலாம். பலர் அவரை மறந்துபோயுமிருக்கலாம். எனினும் 1977களில் சூசைதாசன் என்பவரை வடகிழக்குப் பகுதிகளில் அறிந்திராதவர்கள் எவரும் இல்லை என்ற அளவுக்கு பேச்சாற்றல் மூலம் தமிழ் மக்கள் மத்தியில் புகழ்பெற்றிருந்தார். அன்றைய 1977 பொதுத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பலமிக்க தூண்களில் ஒருவராக இணைந்து அரசியல் மேடைகளில் தமது வசீகரப் பேச்சுக்களினால் மக்கள் அனைவரையும் கவர்ந்த ஒருவராக விளங்கியதுடன், தாம் போட்டியிட்ட மன்னார் தொகுதி உட்பட வடகிழக்குப் பகுதி எங்கும் த.வி. கூட்டணி மகத்தான வெற்றிபெற வழிசமைத்தார். **"பேரைக் கேட்டால் பத்தாயிரம் வாக்கு, முகத்தைக் காட்டினால் முப்பதாயிரம் வாக்கு"** அதுதான் அவரின் அன்றைய நிலை. ஆவேசமான உணர்வுகளைத் தட்டியெழுப்பிய இவரது பேச்சுக்களும், கருத்துக்களும் அன்றைய வெற்றிக்கு ஒரு காரணமாக அமைந்தன என்பது மறுப்பதற்கில்லை.

அரசியலுக்குள் இவர் தாமாகவே வரவில்லை வலிந்தே அவர் வரவழைக்கப்பட்டார் என்றுதான் சொல்ல வேண்டும். 1977களிலே இவரது கல்விப்புலமை, தமிழறிவு, தமிழ்த் தேசியத்தின்மீது இவருக்கிருந்த பற்று வசீகரமான பேச்சாற்றல் இவைகளை அறிந்துவைத்திருந்த தமிழர் தலைமைப்பீடம் இவரைக் கட்சிக்கு அழைத்தது. **"அரசியல் என்பது ஓர் ஆழமான புதைகுழி"** என்று தெரிந்திருந்தும் அன்றைய காலத்தின் கட்டாயத் தேவை கருதி கட்சியின் அழைப்பைத் தம்மால் நிராகரிக்க முடியவில்லையெனக் கூறியிருந்தமை நினைவுக்கு வருகிறது. தலைமையின் அழைப்பை ஏற்றுக் கட்சியில் இணைந்த அவர் 1977 பொதுத்தேர்தலில் தமது ஆற்றலை நிரூபித்துக் காட்டினார்.

### பாராளுமன்றத்தில்

மன்னார் தொகுதியில் மகத்தான வெற்றிபெற்ற அவர் பாராளுமன்றிலே தமிழ் மக்களின் பிரச்சினைகளை எடுத்துக்கூறத் தயங்கியதுமில்லை, தவறவுமில்லை. பாராளுமன்றில் இவர் பேச எழுந்தால் நிசப்தம் நிலவும். இவரது பேச்சுக்கு அவ்வளவு மதிப்பு இருந்தது. தமிழ் மற்றும் ஆங்கில மொழிகள் இவருக்கு கைவந்த கலை. சிங்களமும் சரளமாகப் பேசுவார். பட்டயக்கணக்காளராக இவர் இருந்தமையினால் அரசு இவரின் ஆற்றலைப் பயன்படுத்தத் தவறவில்லை. இவர் எதிர்க்கட்சி உறுப்பினர் ஆயினும் **"மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணம் வீசும்"** என்றவாறு அரசு இவரைப் பயன்படுத்தியது. பாராளுமன்ற நிதிக்குழுவின் தலைவராகவும் நிதிவிடயங்களில் அரசுக்கு ஆலோசனை வழங்கியும் தமது பங்களிப்பைச் செவ்வனே செய்தார். தொகுதி அபிவிருத்தி தொடர்பில் பல திட்டங்களைத் தீட்டியிருந்தபோதிலும் இன்றுபோல் அன்றும் இனவாத அரசானது அதற்கு முட்டுக்கட்டையாகவே இருந்து வந்தது.

ஒருதடவை மன்னார் அபிவிருத்தி தொடர்பாக பாராளுமன்றில் உரையாற்றும்போது **"நரகத்திற்குப்போகும் வீதியைப் பார்க்க வேண்டுமானால் மன்னாருக்கு வந்து பாருங்கோ"** என மன்னாரின் வீதி அவலங்கள்பற்றி கிண்டலாகப் பேசியிருந்தமை அன்று பத்திரிகையில் முக்கிய செய்தியாக வந்திருந்தது. வேலைவாய்ப்புக்கள் வந்தபோதெல்லாம் இன, மத வேறுபாடின்றி அவற்றைப் பங்கீடு செய்திருந்தமை பலராலும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

### யுத்த காலம்

1980களைத் தொடர்ந்து நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்கள் வடகிழக்கின் அமைதியை நிர்மூலமாக்கியிருந்தது. இன அழிப்பு, நில ஆக்கிரமிப்பு, மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்தமை போன்றன எல்லோரையும்போல இவரையும் பாதித்திருந்தது. பலம் பொருந்தியிருந்த தமிழரின் பிரதான கட்சி உடைந்து சிதறிச் சின்னாபின்னமாகியது. தலைவர்கள் நாட்டைவிட்டு வெளியேறவேண்டிய சூழல் ஏற்பட்டது. இது தற்காலிகமாக இவரையும் இடம்பெயர வைத்திருந்தது. ஆயினும் கட்சியைவிட்டு இவர் விலகி ஓடவில்லை. அரசியல் வாழ்வில் இக்காலம் இவருக்கு இருள் சூழ்ந்த காலப்பகுதியாவே காணப்பட்டது.

யுத்தம் நிறைவடைந்த பின்னர் 2010இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் அவரது கட்சி மீண்டும் வன்னித் தொகுதியில் இவரைக் களம் இறக்கியிருந்தது. எனினும் கட்சிப் பிளவுகள், கட்சிக்குள்ளேயே நடைபெற்ற அருவருப்பான செயற்பாடுகள் அவர் வெற்றிபெறத் தடைகளாக அமைந்தன. இதற்கும் அப்பால் கட்சியின் தலைமை முற்றாக இவரைக் கைநெகிழ்ந்திருந்தது என்றே சொல்லலாம். முக்கியமாகத் தேர்தல் காலங்களில் இவரை அறிந்திராத வன்னியின் புதிய வாக்காளர்கள் மத்தியில் இவரது ஆற்றல் பற்றியும், இக்காலகட்டத்தில் இவரின் தேவை பற்றியும் முறையாக எடுத்துரைக்க முனையவில்லை. இதுவும் அவரின் தோல்விக்கு மற்றுமொரு காரணமாக அமைந்தன. கட்சியானது அன்று முனைப்புடன் செயற்பட்டிருப்பின் அத்தோல்வி தவிர்க்கப்பட்டிருக்கும். தேர்தல் காலங்களில் களநிலமை தமக்குச் சாதகமில்லாதிருந்தமை அவரால் நன்கு உணரப்பட்டிருந்தது. ஆயினும் கட்சியின் வெற்றிக்கு அவரது பங்கு அன்று அளப்பெரியதாகவே இருந்தது. அவருக்கு அன்று ஏற்பட்ட இழப்பு முழுத் தமிழ்ச்சமூகத்திற்கும் ஏற்பட்ட ஓர் இழப்பு என்பதுதான் உண்மை.

அவரைச் சந்திக்கும்போதெல்லாம் தமிழ் மக்களின் அவலநிலை பற்றியே கவலையாகப் பேசுவார். தேசியத் தலைவரிடம் தனிமரியாதையுண்டு. இறுதிவரை தமது கட்சியின் விசுவாசியாகவே இருந்தார். இறுதிக்காலங்களில் தாம் இந்த மண்ணிலேயே மடிய வேண்டும், தனது சொந்த மண்ணிலேயே புதைக்கப்படவேண்டும் என்பதுதான் அவரது விருப்பாக இருந்தது. அவரது விருப்பம் 13.10.2017இல் நிறைவேறியது.

அவரது மின்னல் வெட்டியது போன்ற சிரிப்பு, கம்பீர நடை, சிம்மக்குரல், எம்மைவிட்டு என்றும் நீங்காது.

**அவரின் ஆன்மா சாந்தியடைவதாக!**

# 'ஆயிரம் கவிஞர்கள் கவிதைகள்'

## பெருநூல் வெளியீட்டு விழா

## ஓர் பார்வை

- ஜெயா பாலாஜி. முருங்கன் -




32 நாடுகளின் 1098 கவிஞர்களின் கவிதைகள் அடங்கிய 1861 பக்கங்களைக் கொண்ட 4.415 கிலோகிராம் நிறையுள்ள ***"1000 கவிஞர்கள் கவிதைகள்"*** என்ற உலகளாவிய பெருநூலின் வெளியீட்டு விழா கடந்த 21.10.2017 சனிக்கிழமை யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது. முல்லைத்தீவு, வள்ளுவர்புரம் செல்லமுத்து வெளியீட்டகம் இந்நூலை வெளியீடு செய்தது.

மண்டபம் நிறைந்த வழிந்த மக்கள் கூட்டத்தின் மத்தியில் வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமை தாங்க, தமிழ்நாடு தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் தமிழ்ப்பேராசிரியர் திரு. ம. இராசேந்திரன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் திரு. கு. விக்னேஸ்வரன் ஆகியோர் முதன்மை அதிதிகளாகவும், முன்னிலை வகிக்கும் பேராசிரியர்களாக பேராசிரியர் துரை மனோகரன், பேராசிரியர் சி. மௌனகுரு, பேராசிரியர் தி. வேல்நம்பி, பேராசிரியர் அம்மன்கிளி முருகதாஸ் ஆகியோர் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

''படைப்பதனால் என் பேர் இறைவன்'' என்று இறுமாப்புடன் சொன்னார் கவியரசு கண்ணதாசன். படைக்கின்ற, உருவாக்குகின்ற நம் பேராசிரியர்களை டான் தொலைக்காட்சி நிகழ்ச்சி முகமையாளர் திரு. ரி. எஸ். முகுந்தன் ''கடவுளர்கள்'' என்று விளித்தது மிகவும் பொருத்தமானதாக இருந்தது.

இப்பெருநூலிற்கு கவிதை தந்தபின் மரணித்தோருக்கு நினைவு வணக்கம் செலுத்தப்பட்டது. நிகழ்ச்சிகளின் ஆரம்பத்தில் இடம்பெற்றிருக்க வேண்டிய தமிழ்த்தாய் வாழ்த்தும் வரவேற்புரையும் தொடக்கத்தில் நடைபெறவில்லை. செல்வி. அபிநயாவின் வரவேற்பு நடனமும், செல்வி. கி. தில்ஷாவின் தமிழிசை அளிக்கையும் இடம்பெற்றது. முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றத்தினர் கூத்துவழி நடனத்தை மிகச்சிறப்பாக நடாத்திக் காட்டி மிகுந்த கரகோசத்தைப் பெற்றனர்.

நூலின் கவிச்சுவையை மூத்த படைப்பாளர் சோ. பத்மநாதன் அவர்களும், நூல் நோக்குரையை பன்முகப் படைப்பாளி திரு. எம். ஜெயராம சர்மா அவர்களும் வழங்கினார்கள். வந்த விடயத்தைவிட்டு சொந்த விடயத்தையே பேசுவார்கள் என்பதாலோ என்னவோ அரசியல்வாதிகள் எவரும் விழாவுக்கு அழைக்கப்பட்டிருக்கவில்லை.

முத்து ஐயன்கட்டு வலதுகரை மகா வித்தியாலய அதிபர் திரு. நாகேந்திரராசா நிகழ்ச்சிகளை அழகாக நிதானமாகத் தொகுத்து வழங்கினார். இன்னிசைக் கச்சேரிகளின் அறிவிப்புப் பாணியிலான அறிவிப்பும், அங்க அசைவுகளும் இந்தத் தரமான நிகழ்வில் தவிர்க்கப்பட்டிருக்கலாம்.

முல்லைத்தீவு இனிய வாழ்வு இல்ல மாற்றுத்திறனாளி சிறுவர்கள் நூலை வெளியிட்டு வைக்க, முதற்பிரதியை அறிவிருட்சம் பணிப்பாளர் திரு. ஐ. எம். சுரைஸ் பெற்றுக்கொண்டார். அழகிய அட்டைப் படத்துடன் ''ஆயிரம் கவிஞர்கள் கவிதைகள்'' கவிநூல் நன்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. எல்லாக் கவிதைகளும் தரமானவை என்று சொல்லிக்கொள்ள முடியாவிட்டாலும், தரமான பல கவிதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளது மகிழ்ச்சியளிக்கிறது.

பல மூத்த கவிஞர்களின் கவிதைகளுக்கு அறிமுகமாகி இருந்தபோதும், அவற்றை மனப்பாடம் பண்ணி வைத்திருந்தாலும், கவிஞர்களின் முகம் தெரியாது; முகவரி தெரியாது. அக்குறையை இப்பெருநூல் போக்குகிறது மகிழ்ச்சி. மஹாகவி, முருகையன் ஆகிய பெருங்கவிஞர்களின் கவிதைகள் இடம்பெற்றிருக்க வேண்டும். காசி ஆனந்தன், புதுவை இரத்தினதுரை, சேரன் ஆகியோரின் கவிதைகள் இடம்பெற்றிருப்பது திருப்தி. மகாகவி சுப்பிரமணிய பாரதியாரை அகரவரிசைப்படுத்தி, சாதாரண கவிஞர்களோடு 860ஆம் பக்கத்தில் அவரது கவிதை பிரசுரிக்கப்பட்டு எட்டயபுரம் என்ற விபரமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. பாரதி எட்டையபுரம் என்று தெரியாத எந்தக்குழந்தை இந்த மண்ணில் இருக்கிறது? பாரதியை அட்டவணைக்குள் அடக்காது தனியாக அவரது புகைப்படமும் கவிதையும் முதலாவதாக வந்திருக்க வேண்டும். அந்த இமயத்தை வணங்கித்தான் நூலுக்குள் நுழைந்திருக்க வேண்டும்.

வீரகேசரி பெப்ரவரி 15, 2016 இன் அறிவுறுத்தலின்படி, ஆயிரம் கவிஞர்கள் கவிதை நூலில் இடம்பெறும் கவிதையின் ஆகக்கூடிய வரிகள் எனக்குறிப்பிடப்பட்டிருந்தது. ஆயினும் வெளியாகிய நூலில் இடம்பெற்ற பல கவிதைகளில் இந்நிபந்தனை கருத்தில் கொள்ளப்படவில்லை.

சில குறைகளோடும், நிறையவே நிறைகளோடும் (நிறையோடும்) வெளியாகிய இப்பெருநூலின் செயலியக்குனர் யோ. புரட்சிக்கும் அவருக்குத் துணைநின்ற அனைவருக்கும் தமிழ் நெஞ்சங்களின், கவி உள்ளங்களின் வாழ்த்துக்களும், பாராட்டுக்களும் நன்றியும் என்றைக்கும் இருக்கும்.

மன்னாரைச் சேர்ந்தவர்களில் தமிழ் நேசன் அடிகளாரின் ''ஒன்றுமில்லாமையிலிருந்து'', மன்னார் அமுதனின் ''பறை – பறை – பறை'', அடம்பன் வெற்றிச்செல்வியின் ''இருக்குமா சொல்லுங்கள்'', முருங்கன் ஜெயா பாலாஜியின் ''தேடல்'',

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்!



காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள்.
தரங்கண்டு பிரசுரிப்போம்
- *மன்னா நிர்வாகம்* -

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# மன்/புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் சாதனைகள்

புலமைப்பரிசில் பரீட்சை



மன்/ புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி தரம் ஐந்தைச் சேர்ந்த மாணவன் குபேரகுமார் நயோலன் அபிசேக், இவ்வருடம் நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் 191 புள்ளிகளைப் பெற்று மன்னார் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று சாதனை புரிந்துள்ளார். அதுமட்டுமல்லாது இப்பரீட்சையில் முதல் பத்து இடங்களைப் பெற்ற மாணவர்களுள் ஐந்து இடங்களை இப்பாடசாலை மாணவர்கள் பெற்றிருப்பது பெருமைக்குரிய விடயமாகும்.

மேலும் மாவட்ட வெட்டுப்புள்ளியான 153 புள்ளிகளுக்குமேல் 24 மாணவர்கள் தேர்ச்சிபெற்று மாவட்டத்தில் அதிகூடிய மாணவர்கள் சித்தியடைந்த முதற்தர பாடசாலையாக இப்பாடசாலை பெருமையடைகின்றது.

மாணவர்கள் இவ்வுயர்ந்த பெறுபேற்றினைப்பெறத் தம்மை அர்ப்பணித்து சேவையாற்றிய பகுதித்தலைவர் திரு. B. P. பெர்ணாண்டோ, மாணவர்களைக் கற்பித்து உறுதிப்படுத்திய ஆசிரியர்களான திருமதி. S. பிறேமிளா, திரு. R. இராகுலன், திரு. T. பிரஜாபதி, திருமதி. R. நவிஷானா, செல்வி S. மெற்றில்டா ஆகியோருக்கு எமது பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

காற்பந்தாட்டப் போட்டி



அடுத்து 03.10.2017 – 06.10.2017 வரை நடைபெற்ற அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான காற்பந்தாட்டப் போட்டியில் இப்பாடசாலையின் 18 வயதைச் சேர்ந்த அணி மூன்றாம் இடத்தைப்பெற்று சாதனை படைத்துள்ளது.

இவ்வணிக்கு பயிற்றுவிப்பாளராகவும், பொறுப்பாசிரியராகவும் இருந்து வழிநடத்திய ஆசிரியர் திரு. K. நிஷாந்தன் அவர்களுக்கும் அவரோடு இணைந்து செயலாற்றிய ஆசிரியர்களான திரு. T. பெனில்டஸ் றோய், திரு. M. சுபாஸ்கரன், திரு. P. ஆரோக்கியராஜா, திருமதி. T. கமலச்சந்திரன் ஆகியோருக்கும் பயிற்சியின்போது பல்வேறு உதவிகள் வழங்கி ஊக்குவித்த திரு. S. பின்சன், திரு. G. டிக்கோணி ஆகியோருக்கும் பாடசாலைச் சமூகம் பாராட்டுக்களையும், நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றது. 2012ஆம் ஆண்டு தேசிய மட்டத்தில் சாதனை படைத்த எமது மாணவச் செல்வங்கள் நீண்ட இடைவேளையின்பின் மீண்டும் தேசிய மட்டச் சாதனையைத் தொடர ஆரம்பித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# தாழ்வுபாடு புனித சூசையப்பர் நல்மரண ஆயத்த சபையினரின் 25வது ஆண்டு நிறைவு விழாக் கொண்டாட்டம்

தாழ்வுபாடுப் பங்கில் புனித சூசையப்பர் பேரால் நல்மரண ஆயத்த சபை கடந்த 03.09.1992ஆம் ஆண்டில் அப்போதைய பங்குத்தந்தை அருட்பணி. அ. செபஸ்ரியான் (அமதி) அடிகளாரால் ஆரம்பிக்கப்பட்டது. இச்சபை எவ்வித தடங்கலுமின்றி பின்னர் கடமையாற்றிய ஏனைய பங்குத்தந்தையரின் வழிநடத்தலில் தனது ஆன்மீகப் பயணத்தை மேற்கொண்டு கடந்த 03.09.2017இல் தனது 25 ஆண்டினைப் பூர்த்திசெய்துள்ளது.

அன்றைய நாளில் தாழ்வுபாடு பங்குத்தந்தை அருட்திரு. சுகுணராஜ் குரூஸ் அடிகளார் முன்னிலையில் மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்கப் பரிபாலகர் மேதகு ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களால் 25வது ஆண்டு நிறைவு விழாத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

திருப்பலியின் பின்னர் இச்சபையின் உறுப்பினர்கள் ஆயருடன் இணைந்து நிழல்படம் எடுத்துக்கொண்டனர். அத்தோடு காலைச் சீற்றூண்டி, தேநீர் உபசாரம் வழங்கப்பட்டது.

பின்னர் ஏற்கனவே எடுக்கப்பட்ட கூட்டத் தீர்மானத்திற்கமைவாக காலை 10.00 மணியளவில் சிறிய சுற்றுலா பயணத்தை மேற்கொள்ளும் முகமாக உறுப்பினர்கள் அந்தோனியார்புரம் பங்கிற்கு பேரூந்தில் புறப்பட்டுச் சென்றனர். முதலில் அந்தோனியார்புரம் சென்ற இக்குழுவினரை அந்தப் பங்கின் பங்குத்தந்தை அருட்திரு. ரஜனிகாந்த் அடிகளார் தலைமையில் அன்பிய இணைப்பாளர்கள் வரவேற்றனர். அங்கு சிற்றூண்டி உபசரணையுடன் மதிய உணவும் வழங்கப்பட்டது. மாலை 3.00 மணியளவில் திருச்செபமாலை ஒப்புக்கொடுக்கப்பட்டது.

பின்னர் அப்பகுதியில் அமைந்துள்ள பாம்பு காட்டி புனித அந்தோனியார் கோவில் தரிசிப்பும் இடம்பெற்றது. அத்தோடு வலைப்பாடு புனித அன்னம்மாள் ஆலயத் தரிசிப்பும் செபவழிபாடும் இறைவனுக்கு நன்றிகூறும்முகமாக இடம்பெற்றது. ஈற்றில் முழங்காவில் வந்து அங்கு நடைபெற்ற புனித யோசவ்வாஸ் நாட்டுக் கூத்தினையும் கண்டுகளித்து இரவு 11.00 மணியளவில் அனைவரும் தாழ்வுபாடு கிராமத்தை வந்தடைந்தனர்.

# தூய யோசவ்வாஸ் ஆண்டை முன்னிட்டு கலையருவி நடாத்திய போட்டிகள் பற்றிய மதிப்பீடு

**- திருமதி. பெப்பி விக்ரர் லெம்பேட், ஓய்வுநிலை உதவிக்கல்விப் பணிப்பாளர் (தமிழ்) -**

இவ்வருடம் தூய யோசவ்வாஸ் ஆண்டை முன்னிட்டு மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு ஆணைக்குழு 'கலையருவி' நடாத்திய போட்டிகள் பற்றிய மதிப்பீடுகள் :-

♦ போட்டி நிகழ்ச்சிகள் மிகவும் தரமாகவும், சிறப்பாகவும், பலரும் வியக்கும் வண்ணம் அமைந்திருந்தது.

♦ நடுவர்களின் தீர்ப்புக்கள் துல்லியமான, நடுநிலையான, நல்ல தீர்ப்புக்களாக அமைந்திருந்தன.

♦ பல பங்குகள் இப்போட்டிகளில் பங்கெடுத்தன.

♦ காலத்தின் தேவை கருதி நடத்தப்பட்டதால் மாணவர் மட்டுமன்றி பெரும்பாலான பொதுநிலையினரும் தூய யோசவ்வாசின் வரலாற்றை அறியமுடிந்தது.

♦ சிறப்பாக அனைத்து போட்டிகளுக்கும் தூரத்திலிருந்து வருகைதந்து பங்குபற்றிய வவுனியாப் பங்கு மாணவர்களையும் அவர்களை ஊக்குவித்த பங்குத்தந்தை, மாணவர்களை அழைத்துவந்த ஆசிரியர்கள் மற்றும் பெரியவர்களைப் பாராட்ட வேண்டும்.

♦ அயலில் உள்ள பெரிய பங்குகள், மற்றும் சிறிய பங்குகளின் பங்குபற்றுதலை எதிர்காலத்தில் அதிகரிக்க வேண்டும்.

♦ மாணவர் திறன்களை வெளிக்கொணர நடத்தப்பட்ட கட்டுரை, கவிதை, பேச்சு, சித்திரம், தனிப்பாடல், குழுப்பாடல், தனி நடனம், குழு நடனம், நாடகம் போன்ற அனைத்துப் போட்டிகளும், இயக்குனரின் நோக்கம் குறிக்கோள் என்பவற்றை நிறைவுசெய்ததாக அமைந்திருந்தது.

♦ இப்போட்டியின் மிகவும் சிறப்பான அம்சம் யாதெனில், போட்டிகளில் முதல் ஐந்து இடங்களைப் பெற்று வெற்றியீட்டிய மாணவர்களின் விபரங்களைப் புகைப்படத்துடன் மன்னா பத்திரிகையில் பிரசுரித்து உலகறியச் செய்தமையாகும். இது பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

♦ "சொல்லுதல் யார்க்கும் எளிய, அரியதாம் சொல்லிய வண்ணம் செயல்" என்ற குறள் வரிக்கு முத்தாய்ப்பு வைத்ததாக, கலையருவி இயக்குனரும், மன்னா பத்திரிகை ஆசிரியருமான அருட்தந்தையின் சேவை பாராட்டுதற்குரியது. இவருடைய முன்னெடுப்புகளுக்கு அனைவரும் தொடர்ந்து ஒத்துழைப்பை வழங்குவோம்.

# பேச்சுப் போட்டியில் தேசிய ரீதியில் 1ஆம் இடம்

சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத அலுவல்கள் அமைச்சு கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தின் ஊடாக அகில இலங்கை ரீதியில் நடாத்திய பேச்சுப் போட்டியில் கனிஸ்ர பிரிவில் முதலாம் இடத்தினை மன்னார், பேராலயப் பங்கின் சின்னக்கடை வலயத்தைச் சேர்ந்த செல்வி எஸ்வின் நிதிஸ்கா விமலன் பெற்றுள்ளார். இவரை பங்குச் சமூகம் வாழ்த்திப் பாராட்டுகின்றது.

# பேச்சுப் போட்டியில் தேசிய ரீதியில் 2ஆம் இடம்



பேசாலை மன் / சென் பத்திமா மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த செல்வன் ரினிஸ் லூயிட்ஸ் மெக்ஸ்மியன் பறுணாந்து அவர்கள் உலகக் குடியிருப்பு தினம் 2017 ஐ முன்னிட்டு தேசிய ரீதியில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் 2ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் இந்தப் போட்டி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. "பொருத்தமான வீடொன்றின் உரிமை யாவருக்கும்" என்ற தொனிப்பொருளின்கீழ் இந்தப்போட்டி நடாத்தப்பட்டது. இவரை பாடசாலை மற்றும் பங்குச் சமூகங்கள் வாழ்த்துகின்றன.

# மன்/ பாலைக்குளி றோ. க. த. க. பாடசாலை மாணவி சாதனை



மன்/ பாலைக்குளி றோ.க.த.க. பாடசாலையைச் சேர்ந்த செல்வி. யேசுதாசன் ஆன் கிறிஸ்னிக்கா அவர்கள் 2017ம் அண்டு நடைபெற்ற தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் 169 புள்ளிகளைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்து சாதனை படைத்துள்ளார். இந்தப் பாடசாலையில் இருந்து புலமைப் பரிசில் பரீட்சையில் இவரே முதல் தடவையாகச் சித்தியடைந்துள்ளார். இவரை பாடசாலைச் சமூகம் வாழ்த்திப் பாராட்டி நிற்கின்றது.

அத்துடன் இம்மாணவி கடந்த வருடங்களில் துரித கணித செய்கை, ஆங்கில எழுத்தாக்கப் போட்டிகளிலும் மாகாணம், தேசியம் வரை சென்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துத் தந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இப்பாடசாலையானது அதிகஸ்ரப் பிரதேசத்தில் குறைந்த வளங்களைக் கொண்டு இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

தகவல் : அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை சமூகம்.

# மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த நான்கு பேர் தியாக்கோன்களாகத் திருப்பொழிவு

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த நான்கு அருட்சகோதரர்கள் கடந்த ஒக்ரோபர் மாதம் 28ஆம் திகதி சனிக்கிழமை மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் தியாக்கோன்களாகத் திருநிலைப்படுத்தப்பட்டனர். மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் இத்திருநிகழ்வை தலைமைதாங்கி நடாத்தினார். திருப்பொழிவு செய்யப்பட்ட அருட்சகோதரர்களின் விபரம் வருமாறு:

1. மரிசால் சதாஸ்கர், குமானாயங்குளம், ஆட்காட்டிவெளிப் பங்கு 2. றோக்நாதன் மேரி பஸ்ரியன், வஞ்சியன்குளம், வஞ்சியன்குளம் பங்கு, 3. மடுத்தீன் தேவராஜன், புதுக்கமம், வஞ்சியன்குளம் பங்கு, 4. வேதநாயகம் றஞ்சன் சேவியர், விடத்தல்தீவு, விடத்தல்தீவுப் பங்கு.

தியாக்கோன்களாகத் திருநிலைப்படுத்தப்பட்ட அருட்சகோதரர்களுக்கு மன்னார் மறைமாவட்டத் திருச்சபையின் நல்வாழ்த்துக்களையும் செபங்களையும் மன்னா தெரிவித்து மகிழ்கின்றது.

# தேசிய குடும்ப ஞான ஒடுக்கம் – 2017

**க. பேர்னாட், (ஊரவன்), வவுனியா**

தேசிய குடும்ப ஞான ஒடுக்கம் கடந்த புரட்டாதி மாதம் 22ஆம் திகதியிலிருந்து 24ஆம் திகதி வரை புத்தளத்தில் உள்ள தலவில் புனித அன்னம்மாள் திருத்தலத்தில் "புனித யோசவ்வாஸ்சின் ஆண்டில் குடும்பப் புனிதத்துவத்தை நோக்கி..." என்னும் தொனிப்பொருளுடன் தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் சிறப்பாக நடைபெற்றது.

முதலாவது நாளில் பாவசங்கீர்த்தனத்துக்கு ஆயத்தமாக சிங்கள மொழி மூலம் ஒரு நாடகம் அரங்கேற்றிக் காட்டப்பட்டது. தமிழ்மொழி மூலம் அதன் கதைச் சுருக்கம் தெளிவாகக் கூறப்பட்டது. பாவங்களின் கனாகனம், அவற்றின் தாற்பரியம், நாம் அவற்றை எடுத்துக்கொள்ளும் விதம் போன்ற காத்திரமான கருத்துக்கள் "குளோரியா" நாடகத்தின் மூலம் எடுத்துக்காட்டப்பட்டது. சிறந்த காட்சி அமைப்புக்கள் மூலம் உணர்வுபூர்வமாக, ஆன்மீகத் தாக்கங்களுடன் இந்நாடகம் காண்பிக்கப்பட்டது. இந்நாடகம் சிங்கள மொழி மூலமாக இருந்தாலும் சகலரது பாராட்டையும் நல்லுணர்வையும் வெளிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

இரண்டாவது நாளில் (23.09.2017)

1. யோசவ்வாசின் ஆன்மீகமும் குடும்ப வாழ்வும்
2. திருமணத்தின் அடிப்படை அம்சங்கள்
3. கருத்தரிப்பும் அனாவசிய கருத்தரிப்புக்களை தவிர்க்கும் சந்தர்ப்பங்களும்
4. புனித யோசவ்வாசும் குடும்ப ஆன்மீகமும்

ஆகிய தலைப்புக்களில் காலை, மாலை அமர்வுகளாக நான்கு அமர்வுகள் இடம்பெற்றன. இந்த அமர்வுகளின்போது பல பெறுமதிமிக்க சிந்தனைகள் அறிஞர்களால் வழங்கப்பட்டன.

மூன்றாவது நாளில் (24.09.2017) "குடும்பங்களின் ஆன்மீக வாழ்வு" என்னும் தலைப்புடன் முன்னைய நாள் ஆய்வுகளின் சுருக்கப்பார்வை வழங்கப்பட்டது. மதியம் மேதகு ஆயர் அவர்களின் கூட்டுத்திருப்பலியுடன் தேசிய குடும்பத்தியானம் நிறைவுபெற்றது..

இக்குடும்பத்தியானத்தில் தேசிய ரீதியாக சகல பகுதிகளிலும் இருந்து மக்கள் குடும்பம் குடும்பமாக வருகைதந்து பங்குபற்றியிருந்தனர். தேசிய ரீதியில் பல மாவட்டங்களிலிருந்து தமிழ், சிங்கள கத்தோலிக்க மக்கள் அக்கறையுடன் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கதாகும். குறிப்பாக மலையகத் தமிழ் கத்தோலிக்கர்கள் அதிகளவில் பங்கெடுத்ததைக் காணமுடிந்தது.

அமர்வுகளில் வழங்கப்பட்ட கருத்துக்களும், சிந்தனைகளும் கருத்தாழம் மிக்கவையாக இருந்தன. குடும்பப் புனிதத்துவத்தைப் பேணுவதற்கு வித்தியாசமான புதிய வடிவங்களிலான வழிமுறைகளை கையாளத் தூண்டுபவையாக அமைந்திருந்தன. மேலும் தனிப்பட்ட வாழ்வுக்கும் புதிய சிந்தனைப் போக்குகளை வெளிப்படுத்தும் சபையாக அமைந்தமை வாழ்வுக்கு வழிவகுத்திருந்தன.

குடும்பங்களாக கணவன் - மனைவியாக வந்திருந்தவர்களுக்கு வேறாகவும் கணவன் அல்லது மனைவியை இழந்து தனியாக வந்தவர்களுக்கு வேறாகவும் சிறுவர்களுக்கு வேறாகவும் கருத்தமர்வுகள் நடத்தப்பட்டமை சிறப்பம்சமாகும். குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட கருத்துக்களும் சிந்தனைகளும் இளம் குடும்பத்தினருக்கு அதாவது திருமணம் முடித்து ஐந்து அல்லது பத்து ஆண்டுக்குட்பட்டோருக்கு பெரிதும் பயனுடையதாக அமைந்ததாக தனிப்பட்ட கலந்துரையாடல்களின்போது தெரிவிக்கப்பட்டது. இதேபோல் இளைஞர் யுவதிகளுக்கு வழங்கப்பட்ட கருத்துகளும், சிந்தனைகளும் அவர்கள் நடைமுறை உலகில் எதிர்நோக்கும் சவால்களுக்கு சக்தியை அளிக்கக்கூடியதாக இருந்தது என இளைஞர்கள் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

ஆண்டுதோறும் தேசிய குடும்ப ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்படும் இக்குடும்பத் தியானத்தில் கத்தோலிக்க குடும்பங்கள் பங்கெடுத்துப் பயன்பெறுவது புனிதத்துவத்தை நோக்கி கத்தோலிக்க குடும்பங்களை இட்டுச்செல்வதாக அமையும்.

சமூகங்களில் முக்கிய காரணியாக அமையும் குடும்பங்களில் சமயங்கள் கவனம் செலுத்துவது அவசியமானதாகும். ஆன்மீக வாழ்வுக்கு குடும்பங்களை வழிநடத்திச்செல்ல இத்தகைய குடும்ப தியானங்கள் நிச்சயம் உதவும்.

அடுத்த ஆண்டும் இத்தகைய தேசிய குடும்ப தியானம் 2018 புரட்டாதி 21, 22, 23 ஆகிய தினங்களில் நடைபெற உள்ளது. இதில் பங்கெடுக்க குடும்பங்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.

### வீதி அபிவிருத்தி அதிகார சபையின்
### மன்னார் மாவட்டநிறைவேற்றுப் பொறியியலாளர்
## திரு. ஜிப்றி பணியில் இருந்து ஓய்வு



தேசிய வீதிகளின் மன்னார் மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்றுப் பொறியியலாளர் திரு. V. G. R. ஜிப்றி (Jeffery) தனது நீண்டகால அரச பணியிலுருந்து கடந்த ஓகஸ்ட் மாதம் 28ஆம் திகதி ஓய்வு பெற்றுள்ளார்.

மன்னார் மாவட்ட தேசிய வீதிகளை (A,B. தரம்) தரமுயர்த்தி கார்ப்பட் வீதிகளாக மாற்றுவதற்கு இவர் முக்கிய பங்காற்றி இருந்தார். இவருக்கு மாகாணப் பணிப்பாளர் யாழ்ப்பாணம் காரியாலயத்திலும் நிறைவேற்றப் பொறியியலாளர் மன்னார் காரியாலயத்திலும் பிரியாவிடை இடம்பெற்றது.

வீதிப் பராமரிப்பு, வீதிப் புனரமைப்பு வேலைகள், பாலம் புனரமைப்பு வேலைகள் சிறப்பாக மன்னார், அரிப்பு பாலங்களின் புனரமைப்புக்கள் மற்றும் மடுவீதி, மதவாச்சி, மன்னார், தலைமன்னார் (A14) வீதி, நாவற்குழி, கேரதீவு, மன்னார் (A32) வீதி புனரமைப்புக்கள் போன்ற பெறுமதிமிக்க சேவைகளுக்கு கௌரவிப்பு செலுத்தும் வகையில் இந்த பிரியாவிடை நிகழ்வுகள் வட மாகாணப் பணிப்பாளர் எந்திரி திரு. ஜி. ஜே. டி. குரூஸ் அவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டது.

1979 - 1986ல் பெருந்தெருக்கள் திணைக்களத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தராக கடமையாற்றிய இவர், 1986ஆம் ஆண்டு தொடக்கம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் 31 வருடம் தொழில்நுட்ப உத்தியோகஸ்தராகவும், முல்லைத்தீவு மாவட்ட நிறைவேற்றுப் பொறியியலாளராகவும், மன்னார் மாவட்ட நிறைவேற்றுப் பொறியியலாளராகவும் பெறுமதிமிக்க சேவையினை ஆற்றியுள்ளார். (தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

# தூய யோசவ்வாஸ் ஆண்டை முன்னிட்டு

### மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையம் 'கலையருவி'யின் ஏற்பாட்டில் இடம்பெற்ற

# சித்திரப் போட்டி முடிவுகள்

## பிரிவு – I

**1ம் இடம் :**
*பெயர்:*
செல்வி. நிக்சன் சுஜானி
*பங்கு:*
அடம்பன்
*முகவரி:*
தாமரைக்குளம்,
அடம்பன்.



**2ம் இடம் :**
*பெயர்:*
செல்வி. ஆசைப்பிள்ளை
தபித்தா
*பங்கு :* அடம்பன்
*முகவரி:*
சகாயவீதி, அடம்பன்



**3ம் இடம் :**
*பெயர்:*
செல்வி. மார்சல் றெஜி
மதுமிதா
*பங்கு:*
அடம்பன்
*முகவரி:* இத்திக்கண்டல்,
அடம்பன்.



**4ம் இடம் :**
*பெயர்:*
சத்தியராசா ஆன் திவ்யா
*பங்கு:*
முருங்கன்
*முகவரி:*
சுண்டிக்குளி, முருங்கன்



**5ம் இடம் :**
*பெயர்:*
த. நவீன்
*பங்கு:*
வவுனியா
*முகவரி:*
வவுனியா



## பிரிவு – II

**1ம் இடம் :**
*பெயர் :*
செல்வி செ. மேரி
ஏஞ்சலின் குரூஸ்
*பங்கு :*
வங்காலை
*முகவரி :*
வங்காலை



**2ம் இடம் :**
*பெயர் :*
செல்வன் அ. அனிஸ்ரன்
*பங்கு :* பண்டிவிரிச்சான்
*முகவரி :*
*பெரிய பண்டிவிரிச்சான்,*
*கிழக்கு, மடுக்கோவில்.*



**3ம் இடம் :**
*பெயர் :* செல்வன்
அருள்நேசன் கிறிஸ்ரி
டில்ஷான் பிகிறாடோ
*பங்கு :* பள்ளிமுனை
*முகவரி :*
பள்ளிமுனை மேற்கு,
மன்னார்.



**4ம் இடம் :**
*பெயர் :*
செல்வி அ. மதுஷா பீரிஸ்
*பங்கு :*
பண்டிவிரிச்சான்,
*முகவரி :*
பெரிய பண்டிவிரிச்சான்,
மடுக்கோவில்



**5ம் இடம் :**
*பெயர் :* செல்வன்
யக்கோவு டிலக்சன்
*பங்கு :*
முருங்கன்
*முகவரி :*
சுண்டிக்குளி, முருங்கன்



## பிரிவு – III

**1ம் இடம் :**
*பெயர் :*
செல்வன் இ.
அருள் ஞானராஜன்
*பங்கு :* முருங்கன்
*முகவரி :*
சுண்டிக்குளி, முருங்கன்



**2ம் இடம் :**
*பெயர் :*
S. சலமோன்
*பங்கு :*
தட்சனாமடு
*முகவரி :*
கீரிசுட்டான்



**3ம் இடம் :**
*பெயர் :*
ச. தார்சியஸ் பிறேமினி
*பங்கு :* முருங்கன்
*முகவரி :*
முருங்கன் கிராமம்,
முருங்கன்.



**4ம் இடம் :**
*பெயர் :*
சதீஸ் மதுரா
*பங்கு :*
மன்னார்
*முகவரி :*
பனங்கட்டுக்கொட்டு
கிழக்கு, மன்னார்.



**5ம் இடம் :**
*பெயர் :*
யோ. யோய்ன்ஸ்டன்
*பங்கு :* சிறுத்தோப்பு
*முகவரி :*
காட்டாஸ்பத்திரி,
பேசாலை.



## பிரிவு – IV

**1ம் இடம் :**
*பெயர் :*
யேசுதாசன் கிளின்டன்
டலிமா
*பங்கு :* மன்னார்
*முகவரி :* இல: 205,
பனங்கட்டுக்கொட்டு மேற்கு,
மன்னார்.



**2ம் இடம் :**
*பெயர் :*
ஜெயபாலன் ஜெனுஜன்
*பங்கு :*
அந்தோனியார்புரம்
*முகவரி :*
அந்தோனியார்புரம்,
இலுப்பைக்கடவை.



**3ம் இடம் :**
*பெயர் :*
அன்ரன் தவறாஜ் பாஸ்கர்
*பங்கு :*
ஜோசப்வாஸ் நகர்
*முகவரி :*
ஜோசப்வாஸ் நகர்,
தோட்டவெளி



**4ம் இடம் :**
*பெயர் :*
சசிக்குமார் சரண்யா
*பங்கு :* மன்னார்
*முகவரி :*
பனங்கட்டுக் கொட்டு,
மேற்கு, மன்னார்.



**5ம் இடம் :**
*பெயர் :*
E. அனுசன் கெனடி
*பங்கு :*
ஜோசப்வாஸ் நகர்
*முகவரி :*
ஜோசப்வாஸ் நகர்,
தோட்டவெளி.



# தூய யோசவ்வாஸ் ஆண்டை முன்னிட்டு

## மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையம் 'கலையருவி'யின் ஏற்பாட்டில் இடம்பெற்ற

## கவிதை (திறந்த) போட்டி முடிவுகள்

**1ம் இடம் :**
*பெயர்:*
அந்தோனி டொனால்ட் தேவதாசன் அல்மேடா
*பங்கு:* முருங்கன்
*முகவரி:*
முருங்கன் பிட்டி, முருங்கன்



**2ம் இடம் :**
*பெயர்:*
திருமதி. மேரி ஜெசிந்தா யேசுதாசன்
*பங்கு:* செட்டிகுளம்
*முகவரி:* இல: 252, முதலியார்குளம், செட்டிகுளம்.



**3ம் இடம் :**
*பெயர்:*
இராஜேந்திரன் மரிய துஷாந்தினி
*பங்கு:* தலைமன்னார்
*முகவரி:*
தலைமன்னார் பியர், தலைமன்னார்.



**4ம் இடம் :**
*பெயர்:*
மைக்கல் ஆஞ்சலோ எரிக்ஷா
*பங்கு:*
நானாட்டான்
*முகவரி:* மோட்டைக்கடை, நானாட்டான்.



**5ம் இடம் :**
*பெயர்:*
பர்னாந்து டெஸ்மன்
*பங்கு:* அடம்பன்
*முகவரி:*
இத்திக்கண்டல், அடம்பன்.



கவிதைப்போட்டியானது வயது வேறுபாடு இன்றி திறந்த போட்டியாக - யாரும் பங்கெடுக்கலாம் - என்ற நிபந்தனையின்கீழ் நடாத்தப்பட்டது. ***"பணிவாழ்வில் தடம் பதித்த வாஸ் அடிகள்"*** என்ற தலைப்பு வழங்கப்பட்டிருந்தது. இப்போட்டியில் 81 பேர் பங்கெடுத்திருந்தனர். மரபுக்கவிதையாகவோ புதுக்கவிதையாகவோ அமையலாம் எனக் குறிப்பிடப்பட்டிருந்து. போட்டிக்காக அனுப்பப்பட்டிருந்த கவிதைகள் பொதுவாகவே கவிதைக்குரிய தன்மையைக் கொண்டிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சிலர் தாளின் (A4) ஒரு பக்கத்தில் மட்டும் எழுத வேண்டும் என்ற நிபந்தனையை மீறியிருந்தனர். வெற்றிபெற்ற கவிதைகளும் ஏனைய தரமான கவிதைகளும் காலக்கிரமத்தில் மன்னாவில் பிரசுரிக்கப்படும்.

இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கும், ஆர்வத்தோடு பங்கெடுத்த அனைவருக்கும் கலையருவி அமைப்பின் பாராட்டுக்களும் நன்றிகளும்.

## கட்டுரை (திறந்த) போட்டி முடிவுகள்

**1ம் இடம் :**
*பெயர்:*
ராகுலன் அருள் றொகேஷன்
*பங்கு:* அந்தோனியார் புரம்
*முகவரி:* அந்தோனியார்புரம் இலுப்பைக்கடவை, மன்னார்.



**2ம் இடம் :**
*பெயர்:*
அபிஷானி ஜெனிங்ஸ்
*பங்கு:* மன்னார்
*முகவரி:* இல: 24/7, குழந்தையேசு புரம், மன்னார்.



**3ம் இடம் :**
*பெயர்:*
சசிக்குமார் அகல்யா
*பங்கு:* மன்னார்
*முகவரி:*
பனங்கட்டுக்கொட்டு, மேற்கு, மன்னார்.



**4ம் இடம் :**
*பெயர்:* டிலக்ஷனா சண்முகலிங்கம்,
*பங்கு:*
பெரிய கோமரசன்குளம்,
*முகவரி:*
பெரிய கோமரசன்குளம், வவுனியா



**5ம் இடம் :**
*பெயர்:*
ஜெனுஷா ஜெனிங்ஸ்
*பங்கு:* மன்னார்
*முகவரி:* இல: 24/7, குழந்தை இயேசுபுரம், மன்னார்.



இக்கட்டுரைப் போட்டியானது வயது வேறுபாடு இன்றி திறந்த போட்டியாக - யாரும் பங்கெடுக்கலாம் - என்ற நிபந்தனையின்கீழ் நடாத்தப்பட்டது. ***"குடும்பங்களைக் கட்டி எழுப்பிய தூய யோசவ்வாஸ்"*** என்ற தலைப்பில் 400 - 500 சொற்களைக் கொண்டதாக கட்டுரைகள் இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. 77 பேர் இப்போட்டியில் பங்கெடுத்திருந்தனர். பலர் கட்டுரையின் தலைப்பிற்குள் நின்று எழுதவில்லை என்பதை அவதானிக்க முடிந்தது.

வெற்றி பெற்ற கட்டுரைகளும் ஏனைய தரமான கட்டுரைகளும் சில திருத்தங்களோடு காலக்கிரமத்தில் மன்னாவில் பிரசுரிக்கப்படும்.

இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கும், ஆர்வத்தோடு பங்கெடுத்த அனைவருக்கும் கலையருவி அமைப்பின் பாராட்டுக்களும் நன்றிகளும்.

## தனிப்பாடல் போட்டி முடிவுகள்

### பிரிவு - I

**1ம் இடம் :**
*பெயர்:*
ஒஸ்மன் சாள்ஸ் காவியா
*பங்கு:* முருங்கன்
*முகவரி:*
முருங்கன் கமம், முருங்கன்



**2ம் இடம் :**
*பெயர்:*
ஜீட் புனிதராஜா லக்ஷியா மெறின்
*பங்கு :* முருங்கன்
*முகவரி:*
முருங்கன் கமம், முருங்கன்



**3ம் இடம் :**
*பெயர்:*
அன்ரன் பொன்ட் கிஷாரிகா மெரின்
*பங்கு:* மன்னார்
*முகவரி:*
சிறிய குருமடவீதி, சாவற்கட்டு, மன்னார்.



**4ம் இடம் :**
*பெயர்:*
யோசப் பிரபாகரன் கவோன்
*பங்கு:* வவுனியா
*முகவரி:* இல: 15, அன்னை திரேசா வீதி, வவுனியா.



### பிரிவு - II

**1ம் இடம் :**
*பெயர் :*
அன்ரன் பெலிக்ஸ் அன்றோ அலெக்சியன்
*பங்கு :* முருங்கன்
*முகவரி :*
கல்நாட்டி, முருங்கன்



**2ம் இடம் :**
*பெயர் :*
றொகான் டிக்னிற்றா குருஸ்
*பங்கு :* பேசாலை
*முகவரி :*
*7ம் வட்டாரம், பேசாலை*



**3ம் இடம் :**
*பெயர் :*
லெபேயு மேரி துஷாந்தி பீரிஸ்
*பங்கு :* தாழ்வுபாடு
*முகவரி :*
லூக்காவீதி, தாழ்வுபாடு, மன்னார்.



**4ம் இடம் :**
*பெயர் :*
செந்தில் ரூபன் மெதோடியஸ் டிஷான்
*பங்கு :* வவுனியா
*முகவரி :*
புனித யோசெப்வாஸ் வீதி, இறம்பைக்குளம், வவுனியா



**5ம் இடம் :**
*பெயர் :*
பேரின்பநாயகம் மேரி எழிலரசி
*பங்கு :* மன்னார்
*முகவரி :*
குழந்தையேசுபுரம், மன்னார்.



### பிரிவு - III

**1ம் இடம் :**
*பெயர் :*
அமலறாஜ், இம்மானுவலி
*பங்கு :* மன்னார்
*முகவரி :* இல: 8/11 குழந்தையேசுபுரம், தாழ்வுபாடுவீதி, மன்னார்



**2ம் இடம் :**
*பெயர் :*
குசை மிதுஷா குருஸ்
*பங்கு :*
வங்காலை
*முகவரி :*
அக்னேஸ்புரம்



**3ம் இடம் :**
*பெயர் :*
சந்தியோகு ஷாமின் பூர்விகா
*பங்கு :* முருங்கன்
*முகவரி :*
முருங்கன் கமம், முருங்கன்.



**4ம் இடம் :**
*பெயர் :*
நோபட் பெனோன்சியா, பெனாண்டோ.
*பங்கு :* பேசாலை
*முகவரி :*
7ம் வட்டாரம், பேசாலை



**5ம் இடம் :**
*பெயர் :*
லதாஜி குமார்
*பங்கு :* வவுனியா
*முகவரி :*
சென் பிரான்சிஸ் சேவியர் வித்திச்சாலை, தி.கு.க. மடம் வவுனியா



### பிரிவு - IV

**1ம் இடம் :**
*பெயர் :*
கொண்சென்ரின் மேரி ஜென்சினி தேவி
*பங்கு :* அடம்பன்
*முகவரி :*
கார்மேல் பெண்கள் இல்லம், அடம்பன்.



**2ம் இடம் :**
*பெயர் :*
கனகசிங்கம் இக்னேஷியா, தர்ஷினி
*பங்கு :* மன்னார்
*முகவரி :*
இல: 177/ ஜீவபுரம் எமில்நகர், மன்னார்.



**3ம் இடம் :**
*பெயர் :*
பிரான்சிஸ் ஜெபனாஸ் மியூறன் பிகிறாடோ
*பங்கு :* பள்ளிமுனை
*முகவரி :*
பள்ளிமுனை கிழக்கு, மன்னார்.



தனிப்பாடல் போட்டிக்கு பலர் விண்ணப்பங்களைத் தந்திருந்தாலும் போட்டி அன்று பலர் வருகை தரவில்லை. பிரிவு Iஇல் 4 பேரும், பிரிவு IIஇல் 12 பேரும், பிரிவு IIIஇல் 8 பேரும், பிரிவு IVஇல் 3 பேரும் பங்கெடுத்திருந்தனர்.

பாடல், தூய யோசவ்வாஸ் அடிகளின் வாழ்வையும் பணியையும் பற்றியதாக, புதிதாக எழுதி இசையமைக்கப்பட்டதாக, 3 - 5 நிமிடங்களுக்குள் அமைய வேண்டும் என்பது இப்போட்டிக்கான நிபந்தனையாகும். கடினமான இந்நிபந்தனைகள் காரணமாக பலர் இதில் கலந்துகொள்ளவில்லைப் போலும். ஆயினும் கலந்துகொண்டவர்கள் உற்சாகமாகப் பங்கெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

தனிப்பாடல் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கும், ஆர்வத்தோடு பங்கெடுத்த அனைவருக்கும் கலையருவி அமைப்பின் பாராட்டுக்களும் நன்றிகளும். எமது போட்டிகளுக்கு நடுவர்களாகக் கலந்து உதவிய அனைவருக்கும் எமது சிறப்பான நன்றிகள்

\- இயக்குனர், கலையருவி



# அதிர்வுகள் .....!

## அருட்பணியாளர் செ. அன்புராசா, அ.ம.தி எழுதும்

சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 69

# “தற்காலியப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வே” தற்கொலை! உயிரின் மேன்மை உணரப்படுமா ?

நூலகத்திற்குச் சென்ற ஒருவன் நூலகரிடம், “தற்கொலை பற்றிய நூல் ஒன்று தரமுடியுமா?” என்று கேட்கிறான். மிக நீண்ட காலமாக நூலகராகப் பணியாற்றும் அவர் உயிரின் மேன்மையையும் நூல்களின் பெறுமதியையும் அறிந்தவர். அதனால் அவர் மிகவும் நிதானத்துடன், “பிறகு, நூலைக்கொண்டு வந்து யார் தருவார்?” என வினாவுக்கு வினாவாலே விடை பகர்ந்திருக்கின்றார்.



### *வாழ்வதைவிட சாவது மேலானதல்ல!*

வாழ்வதைவிட சாவது மேலானது எனத் தவறாக எண்ணி திட்டமிட்டு ஒருவர் தம் உயிரை அழித்துக்கொள்வதே தற்கொலை ஆகும். இக்கட்டுரையில் ஒரு நாட்டின் அல்லது ஒரு மக்கள் குழுமத்தின் உண்மையான நியாயமான விடுதலைக்காக மேற்கொள்ளப்படும் தியாகச் செயல்கள் தற்கொலை வடிவங்களில் நிறைவேறியதை - நிறைவேறுவதை வரலாற்றில் காணலாம். அவைபற்றி அலசுவதாக இப்பகுதி அமையாது. இப்பந்தியில் பொதுவாகத் தனிப்பட்ட காரணங்களுக்காக வாழ்வதைவிட சாவது நல்லது எனப் பிழையாக நினைத்து அநியாயமாக உயிரை மாய்ப்பவர்களின் செயல் பற்றியே ஆராயப்படுகின்றது.

### *வடக்கு மாகாணத்தில்!*

ஆயுதப் போருக்குப் பின்னர் தற்கொலைச் சம்பவங்கள் அதிகரித்துச் செல்வதைப் புள்ளி விபரங்கள் தெரிவித்து நிற்கின்றன. வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் இவ்வாண்டு ஆவணி மாதம் வரையிலான எட்டு மாதங்களில் 796 பேர் தற்கொலை செய்ய முயற்சித்திருப்பதாகவும் அதில் 85 பேர் உயிரிழந்துபோனதாகவும் மருத்துவமனை வட்டாரப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. மருத்துவமனைகளின் பதிவுகளுக்கு அப்பால் முயற்சிக்கப்பட்டவை இத்தரவில் சேர்க்கப்படுவதில்லை என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டி இருக்கிறது.

வீரம் செறிந்த வாழ்வியலோடும், வரலாற்றோடும், பண்பாட்டோடும் சிறப்புற்று விளங்கிய ஒரு மக்கள் குழுமம் இன்று தன்னம்பிக்கை இழந்து உயிரை மாய்த்து வாழும் சமூகமாக மாறிவருவது மிகவும் வேதனைக்குரியது. அறுக்க அறுக்க வளரும் அறுகு போலவும், வெட்ட வெட்டத் தளைக்கும் வாழைபோலவும் வளர வேண்டிய எம் மக்கள் குழுமம் உயிரை மாய்க்கத் தலைப்பட்டிருப்பதை என்னவென்று சொல்வது! வளர்ந்துவரும் இச்சிக்கலை ஆழமான ஆய்வுக்கு உட்படுத்தி எம் சமூகம் மீண்டெழ வழிகள் அமைக்கப்படவேண்டியது இன்றைய காலத்தின் இன்றியமையாத ஒருபெரும் தேவையாக உருவெடுத்து நிற்கின்றது.

### *அரியாலையில் நடந்த தற்கொலைச் சம்பவம்!*

ஐப்பசித் திங்கள் இறுதி வாரத்தில் அரியாலையில் நடந்த ஒரு குடும்பத்தின் தற்கொலைச் செயலானது பெரும் கொடுமையாக மனித நேயம் கொண்ட அத்தனை பேராலும் பார்க்கப்படுகின்றது. ரதணன் கருசாந்தன் (37) என்பவர் ஒரு கோடியே பதினோழு இலட்சம் ரூபா பணத்தினை நம்பிக்கையின் அடிப்படையில் தன் நண்பன் ஒருவனுக்கு ஆறு மாதத் தவணையில் கடனாகக் கொடுத்துள்ளார் எனத் தெரியவருகின்றது. அப்பணத்தினை மீளப்பெற இரண்டு ஆண்டு முயற்சிகள் மேற்கொண்டுள்ளார்.

இவ்வளவு தொகைப் பணத்தினையும் இரண்டாண்டு காலமாக மீளச் செலுத்தாது இழுத்தடித்து வந்த நிலையில் கிருசாந்தன் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். கொடுத்த பணத்தில் பத்து இலட்சம் ரூபாவுக்கே ஆதாரம் இருந்துள்ளது. அதனைக்கூட, பெற்றுக்கொண்டவன் பகுதி பகுதியாகவே செலுத்தி இருக்கின்றான். இந்நிலையில், மற்றைய ஒரு கோடியே ஏழு இலட்சம் ரூபா கொடுத்ததற்கு எவ்வித ஆதாரமும் இல்லாததினால் வழக்கு நீண்டு கொண்டு சென்றிருக்கின்றது!

இந்நிலையில் தற்கொலை புரிந்து உயிரை மாய்த்துக் கொள்வதை மனைவியோடு சேர்ந்து தீர்மானித்து இருக்கின்றார் கிருசாந்தன். எனினும் முதலில் நஞ்சுண்ட கிருசாந்தன் காப்பாற்றப்பட்ட நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உயிருக்காகப் போராடி மூன்று நாள்களின்பின் சாவடைந்துள்ளார். ஏறக்குறைய கிருசாந்தன் சாவடைந்து இரு மாதங்களில் அவன் மனைவி சுநேத்திரா (28) தன் மூன்று பச்சிளம் பாலகர்களுக்கும் நஞ்சூட்டி அவர்களைச் சாவடையச் செய்து தானும் கணவனின் வழியில் தற்கொலை புரிந்துள்ளார்.

### *சில கேள்விகளை இச்சமயத்தில் கேட்டுத்தான் ஆகவேண்டும்!*

இவ்வளவு தொகைப் பணத்தினையும் கடனாகப் பெற்றுக் கொண்டவர்கள் கடன் கொடுத்தவனை மோசடி செய்வதற்கு எப்படி மனம் வந்தது? நட்பாயிருந்து கடனைப் பெற்றுக் கொண்டபின்னர் எப்படி ஒரு நண்பனை இவ்வாறான இக்கட்டில் தள்ள எண்ணம் வந்தது? இப்பணம் கொடுக்காத நிலையில் அக்குடும்பம் எத்தகைய நெருக்கீடுகளைச் சந்திக்கும் என எண்ணிப் பார்க்கக்கூட கடன்பட்டவர்களுக்கு மனம் இடம் கொடுக்கவில்லையா? கணவனின் சாவின் பின்னராவது அப்பணத்தின் ஒரு பகுதியையாவது கொடுப்பதற்கு அவர்கள் மனம் இரங்கவில்லையா? கணவனின் சாவையே தாங்க முடியாது வாழ்ந்துவந்த சுநேத்திரா கணவன் பட்ட கடனை எப்படிக் கொடுப்பாள் என்பதை கிருசாந்துக்குக் கடன் கொடுத்தவர்கள் சிந்தித்திருப்பார்களா? அப்படி மனிதாபிமானத்தோடு நடந்திருந்தால் சுநேத்திரா இவ்வாறான ஒரு தவறான முடிவை தேர்ந்து கொள்ளாது தன் மூன்று தெய்வப் பிறவிகளுடனும் இந்நாள்வரை இருந்திருப்பாள் அல்லவா?

மறுபுறத்தில், இவ்வளவு தொகைப் பணத்தை எவ்வித ஆதாரமும் இன்றி கிருசாந்தன் கொடுத்தது சரியானதா? கடனாகக் கொடுக்கலாம், ஆனால் இவ்வளவு தொகைப் பணத்தை இவன் கடனாகப்பெற்றுக் கொடுக்க வேண்டிய தேவை என்ன? கடன்பட்டுக் கொடுத்த கடனை செலுத்த முடியாத நிலையில் தான் தேர்ந்துகொள்ளும் தவறான வழியில் தன் பிள்ளைகளோடு மனைவியையும் கேட்டு நின்றது எவ்வகையில் நியாயமானது? இக்கொடுக்கல் வாங்கல்களையும் எவ்வித குற்றங்களையும் அறியாத தெய்வப் பிறவிகளான அக்குருத்துக்களைக் (சயித்-2, சரவணா-2, கர்சா-4) கொன்றுவிட சுநேத்திராவுக்கு எப்படி மனம் வந்தது?

“நீடித்த காலம் வாழ ஆசைப்பட்டோம். இறுதிவரை போராடினோம். முடியவில்லை... போகிறோம். எமக்கான நீதியைப் பெற்றுக்கொடுங்கள்! “என சாவின் பிடியில் நின்றுகொண்டு அபயக் குரல் எழுப்பிய ஓர் அபலையின் இரத்தக் கண்ணீர் இச்சமூகத்திற்குச் சொல்லும் பாடம்தான் என்ன என்பதை நம் சமூகம் சிந்தித்தே ஆகவேண்டும்!

### *பரிதாபத்திற்குரிய பாவச் செயல்!*

உண்மையில் கொஞ்சம் ஆழமாக சிந்தித்துப் பார்த்தால் தற்காலிக பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வே தற்கொலைச் செயலாகும் எனச் சொல்லலாம்போல் தெரிகின்றது. இன்னுமொரு வகையில் அற்ப விடயத்திற்கு ஆயுட்காலத் தண்டனை என்றுகூடச் சொல்லலாம். தற்கொலைச் செயல்களை யாரும் ஓர் உயர்வான மேலான தியாகச் செயலாகக் கருதியதுமில்லை, கருதுவதுமில்லை, கருதப்போவதுமில்லை. தற்கொலை செய்பவர்களின் மேல் பரிதாபப்படுகின்றார்களேதவிர அச்செயலை யாரும் ஏற்றுக்கொள்வதுமில்லை என்பதில் இருந்து தற்கொலை எவ்வளவு மடமைத்தனமானது, கோழைத்தனமானது, தீமையானது, பாவமானது என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

### *எவரும் நியாயப்படுத்துவதுகூட இல்லை!*

அடுத்து, தற்கொலையினை எம் மதமோ, எவ்வினமோ, எப்பண்பாடோ ஆதரிப்பதும் இல்லை - நியாயப்படுத்துவதுகூட இல்லை என்பதில் இருந்து இச்செயல் ஒரு பாதகச் செயல் என்பதை அனைவரும் எண்ணிப்பார்க்கவேண்டும். இதனை இல்லாமல் போக்க அதிரடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இல்லையேல் இதுவே கால ஓட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்படாத அங்கீகாரமாக மாறக்கூடிய அபாயம் - பேராபத்து இருக்கின்றது என்பதையும் கோடிட்டுக்காட்ட வேண்டி இருக்கின்றது.

### *விலங்குகள் தற்கொலை செய்வதில்லை!*

உயிர்வாழ்வனவற்றில் மனிதனைத் தவிர வேறு எந்த உயிரினமும் தற்கொலை செய்துகொள்வதில்லை என்பதை ஆய்வுகள் நிரூபிக்கின்றன. ஆனால் பெலிக்கான் பறவை போன்ற ஒருசில உயிரினங்கள் தங்கள் உயிரைத் தியாகம் செய்து தமது சேய்களுக்கு உயிர்கொடுப்பதில் தம் உயிரைக்கூடத் துறந்துவிடுகின்றன என்று சொல்லப்படுகின்றது.

எனினும் எக்காரணத்தை முன்னிட்டும் மனிதனைத் தவிர எவ்வுயிரினமும் கடிதம் எழுதிவைத்துவிட்டுத் தற்கொலை செய்து கொள்வதில்லை என்பதை மனிதர்களாகிய நாம் மனதிற் கொள்ளவேண்டி இருக்கின்றது. தற்கொலைக்குக்கூட மனிதன்தான் மனிதனுக்குக் காரணமாய் இருக்கின்றான் என்பதை எண்ணிப் பார்க்கும்போது “என்ன இனமடா இவன்!” எனவும் எண்ணத் தோன்றுகின்றது.

### *தூண்டிகளாய் துலங்குதல் ஆகாது!*

ஒருவரைத் தற்கொலை செய்யத் தூண்டக்கூடிய வகையில் குடும்பத்தவர்களும், உறவுகளும், நண்பர்களும், சமுதாயமும், ஏன் அரசுகளும்கூட நடந்துகொள்ளக் கூடாது என்பதையும் ஒவ்வொருவரும் மனங்கொள்ள வேண்டும். உதாரணமாக குடும்பப் பெண்ணைக் கணவன் குடித்துவிட்டு வந்து துன்புறுத்தும்போது அவள் தவறான முடிவுகளை எடுப்பதற்கு அவள் கணவன் காரணமாகின்றான்.

அதேபோல கடன் கொடுத்துவிட்டு அதனைத் திருப்பிச் செலுத்தாதபோது கடன் கொடுத்தவரை மன நெருக்கீட்டுக்கு உள்ளாக்கி மனவிரக்தியடையச் செய்தல் தவறான முடிவுகளை எடுக்கத் தூண்டுதலாக அமையலாம். அப்படியே, கடன் கொடுத்தவரும் கடன் பெற்றவரை மனவிரக்திக்கு உள்ளாக்குதல் பிழையான முடிவுகளை எடுக்கத் துணைபுரியலாம். மேலும் தாங்கமுடியாத மக்களின் சுமைகளைக் குறைக்க அரசாங்கங்கள் செயலற்று இருக்கும்போது வறுமைப்பட்ட மக்கள் இந்திய விவசாயிகளைப்போல விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டு தவறான முடிவுகளை நாடலாம்!

ஆக, தற்கொலைச் சம்பவங்கள் நடைபெறாதிருக்க தனிநபர்கள் தன்னம்பிக்கையில் உறுதியாய் இருப்பதோடுமட்டுமல்ல சமூகமும் தனிமனிதர்களுக்கு நம்பிக்கையை ஊட்டக்கூடிய வகையில் செயலாற்ற முன்வரவேண்டும்.

### *குருவிகள் கூடுகட்டுவதைப் பாருங்கள்!*

குருவிகள் பொதுவாகக் கூடுகட்டும்போது ஒவ்வொரு குச்சாகச் சேர்த்துத்தான் அவை தம் கூடாரத்தை அமைத்துக்கொள்கின்றன எனத் தெரிய வருகின்றது. அவ்வாறு கூடுகட்டும்பொழுது அது பலத்த காற்றில் அகப்பட்டு விழுந்துவிட்டால் விழுந்த அக்கூட்டினை எடுத்து மீண்டும் தன் கூட்டினைக் கட்டுவதில்லை. புதிதாகக் குச்சிகளைச் சேர்த்து கூடுகட்டும் முயற்சியை அவை தொடர்கின்றன. மீண்டும் புதிதாகக் கட்டுகிறபோது மழைபெய்து அல்லது ஏதோ ஒரு காரணத்தினால் அக்கூடு கீழேவிழுந்து விட்டால் அவை மீண்டும் இன்னுமொரு புதிய கூட்டினைக் கட்ட ஆரம்பிக்கின்றன.

இவ்வாறு எத்தனை தடவைகள் கூடு கட்டும் முயற்சி தடைப்பட்டாலும் அத்தனை தடவைகளும் தடைகளைத் தாண்டி தம் முயற்சியில் அவை முன்னேறுகின்றன. ‘முயற்சி தவறலாம், ஆனால் முயற்சிக்கத் தவறக்கூடாது’ என்பது அக்குருவிகளின் விருதுவாக்காக இருக்கின்றது போலும்!

### *குருவிகளிடமிருந்தும் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது!*

நினைத்தது கைகூடவில்லை என்பதற்காக, யாரோ ஒருவர் கைவிட்டுவிட்டார் என்பதற்காக, யாரோ ஒருவர் ஏமாற்றிவிட்டார் என்பதற்காக, வாழ்க்கையை முடித்துக்கொள்வது சரியானதா? முன்னெடுத்த முயற்சியில் தடைகள் ஏற்பட்டுவிட்டது, எடுத்த காரியத்தில் தோல்வி வந்துவிட்டது என்பதற்காக எல்லாம் முடிந்து போகிறதா? பத்துத் தடவைகள் கூடுகட்டி பத்துத் தடவைகளும் கைகூடவில்லை என்பதற்காக எந்தக் குருவியும் இனிமேல் கூடே கட்டுவதில்லை என்ற முடிவுக்கு வருவதில்லையே! உண்மையில் அவைகளுக்குத் தெரிந்த மந்திரங்கள் இரண்டு. ஒன்று இடைவிடாத் தொடர் முயற்சி, இரண்டு இன்னும் வாய்ப்புக்கள் உண்டு என்ற நம்பிக்கை என்பவைதான்.

ஆகவே, குருவிகள் தங்கள் விடாமுயற்சியால் வாய்ப்புக்களை உருவாக்கி வாழ்க்கையைத் தம் வசமாக்கிக் கொள்கின்றன. இத்தகைய ஓர்மம் மனிதனுக்கு வேண்டும், அதாவது நமக்கு வேண்டும். எந்தக் குருவியும் இத்தனை தடவைகள் கூடு கட்டி அத்தனை தடவைகளும் தடைகள் ஏற்பட்டுத் தோற்றுப்போனதால் தற்கொலை செய்ய முடிவு செய்து அச்செயலைச் செய்து முடித்ததாக வரலாற்றில் இதுவரையில் தகவல் இல்லை.

அப்படியிருக்க மனிதனுக்கு மட்டும் ஏன் தன் இன்னுயிரை மாய்க்கும் மனநிலை எழுகின்றது என்பதை ஆராய்ந்து பார்த்து, ஆழச் சிந்தித்து இத்தகைய மனப்பாங்கு களையப்பட அனைவரும் துணிய வேண்டும், அனைவரும் ஒருவருக்கு ஒருவர் துணையாக இருக்க வேண்டும்.

## மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே, உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள். சில விநியோகஸ்தர்கள் மன்னாவைக் காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம்.

பங்கு மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில் பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அல்லது பொதுநிலைப் பணியாளர்கள் இது விடயத்தில் அதிக அக்கறை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் கைக்கு பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரிய விநியோகஸ்தரிடம் ஒப்படைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம். **- மன்னா நிர்வாகம்.**

## சந்தாதாரர் கவனத்திற்கு!

மன்னா பத்திரிகைக்கான சந்தாப் பணத்தை செலுத்தாதவர்கள் காலம் தாமதிக்காமல் உடனடியாக உங்கள் சந்தாவை செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள். உங்கள் மன்னா சந்தாக் காலம் முடிவடையும் திகதி உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னா பத்திரிகையில் உங்கள் விலாசத்திற்குக் கீழே உள்ளது. எனவே அதைப் பார்த்து உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் - கொள்ளுங்கள். **- மன்னா நிர்வாகம்.**

# நவீன சிலை வழிபாடு

அருட்பணி.
மா. றேஜிஸ் இராசநாயகம்

**முகவுரை:**

விவிலியம் ஒருவிதத்தில் இறைமக்கள் எவ்வாறு மீண்டும் மீண்டும் சிலைவழிபாட்டிலிருந்து உண்மை இறைவனிடத்தில் திரும்பினர் என்பது பற்றிய கதை. தம் இறைவன் எந்தவொரு உருவத்தையும் தனக்கு நிகராக உருவாக்குவதை விரும்பாத இறைவன் என்பதை இஸ்ராயேல் மக்கள் பத்துக் கட்டளைகளின் மூலம் அறிந்திருந்தனர். ஏனெனில், ஆண்டவர் கூறுவது: "நானே உன் கடவுளாகிய ஆண்டவர். அடிமை வீடாகிய எகிப்து நாட்டினின்று உன்னை வெளியேறச் செய்தவர். என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது. மேலே விண்வெளியில், கீழே மண்ணுலகில், பூமிக்கடியே நீர்த்திரளில் உள்ள யாதொன்றின் சிலையையோ ஓவியத்தையோ நீ உருவாக்க வேண்டாம். நீ அவைகளை வழிபடவோ அவற்றிற்குப் பணிவிடை புரியவோ வேண்டாம். ஏனெனில், உன் கடவுளும் ஆண்டவருமாகிய நான் இதைச் சகித்துக்கொள்ள மாட்டேன் என்னைப் புறக்கணிக்கும் மூதாதையரின் பாவங்களைப் பிள்ளைகள்மேல் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் தண்டித்துத் தீர்ப்பேன் (வி.ப. 20:1-5). யாவே தன்னைத் தவிர வேறு எவரையும் மனிதன் ஏற்றுக்கொள்வதைச் சகிக்காத இறைவன். சிலை வழிபாடு என்பது கடவுளுக்குக் கொடுக்கவேண்டிய இடத்தை வேறொரு நபருக்கோ பொருளுக்கோ கொடுப்பது. இத்தகைய சிலைவழிபாட்டை பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் இன்றும் வேறுபட்ட பரிமாணங்களில் நாம் பார்க்கிறோம்.

**பொற்கன்று:**

மனிதன் நம்பிக்கை இல்லாமல் வாழமுடியாது. ஒன்றில் அவன் உண்மைக் கடவுளை நம்புகிறான் அன்றேல் அவன் ஒரு பொற்கன்றை உருவாக்கி அதைத் தன் இறைவனாக்கி வழிபடுகிறான்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் எவ்வாறு தம் இறைவனைக் கைநெகிழ்ந்து சிலை வழிபாட்டுக்குள் சிக்குண்டார்கள் என்று விடுதலைப் பயண நூல் விபரிக்கிறது (வி.ப.32:7-11). நம்புவதற்குக் கடினமான கதையாக இது தோன்றலாம். எகிப்தின் அடிமைத் தளைகளிலிருந்து இஸ்ராயேலை இறைவன் காத்தார். இஸ்ராயேலைக் காப்பாற்ற புதுமைகளுக்குமேல் புதுமைகள் செய்தார். எகிப்தியர்மேல் கொள்ளைநோய் பரவச்செய்தார். செங்கடலை இரு கூறுகளாகப் பிரித்து இஸ்ராயேலைத் தப்புவிக்கச் செய்தார். பகலில் மேகத்தின் மூலமாகவும், இரவில் நெருப்புத் தூணின் மூலமாகவும் வழிநடத்தினார். வானத்திலிருந்து மன்னா பொழிந்து அவர்களை வாழ்வித்தார்.

"இப்படி கண்ணின் மணிபோலக் காத்த கடவுளை என்றுமே நம்புவர், கடந்த காலத்தில் கரம்பிடித்து நடத்திய கடவுள் எதிர்காலத்திலும் இவ்வாறே நம்மைக் காப்பார் என்று நம்புவர்" என்றுதானே நாம் எண்ணுவோம்? ஆனால், நடந்தது அப்படியல்ல, மோயீசன் சீனாய் மலையிலிருந்து இறங்குவதற்குத் தாமதமானதும் மக்களின் மனங்கள் பதறத்தொடங்கிவிட்டன. "ஒருவேளை மோயீசன், இறந்துவிட்டாரோ? அல்லது இறைவன் தம் மக்களைக் கைவிட்டுவிட்டாரோ?" என்ற எண்ணங்கள் அவர்கள் மனதில் அலைமோதத் தொடங்கின.

ஒரு பொற்கன்றுக் குட்டியைச் செய்துதரும்படி ஆரோனைத் தூண்டினர். அவர்கள் களியாட்டத்தில் இறங்கினர். விடுதலைப் பயண நூல் அழுத்திக்கூறும் வார்த்தையைக் கவனிப்போம். "களியாட்டத்தில் இறங்கினர்." அதன் அர்த்தம் என்னவென்று தெரியுமா? அவர்கள் வெறியாட்டத்தில் ஈடுபட்டனர். மோயீசன் மலைக்குச் சென்று நாற்பதே நாட்களுள் இஸ்ராயேல் மக்கள் சிதறடிக்கப்பட்டுவிட்டனர்.

நம்பமுடியாத கதையாக உள்ளதல்லவா? மேலே கூறப்பட்ட இறைவனின் அற்புதச் செயல்கள் அனைத்தையும் இப்பொற்கன்றுக் குட்டியே தமக்கு அனைத்தையும் செய்யும் என்று நம்பி அதன் பாதத்திலே விழுந்து வணங்கினர். "உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவர் ஒருவருக்கே பணி செய்வாயாக" என்று அலகைக்கு இயேசு சொன்னதைப் பொய்யாக்கிவிட்டனர்.

பழகிப்போனதால் வாசித்துக்கொண்டே வாழுகிறோம். நாமும் இறைவன் நமக்கு கடந்த காலத்தில் செய்தவை அனைத்தையும்



கிஞ்சித்தும் சிந்திக்காமல் வாழுகிறோமல்லவா? இன்று எனக்குத் தேவையானது எது என்பது மட்டும்தான் எனக்கு முக்கியம்.

பொற்கன்றுக் குட்டியின் கதையை நாம் வாசிக்கும்போது, அம்மக்கள் எவ்வளவு மதியீனர்களாக வாழ்ந்தார்கள் என்று மிக எளிதாக எடைபோட்டு விடுகிறோம். மட்டுமல்ல இக்கதைக்கும் இன்று வாழும் நமக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லையென முடிவுகட்டிவிடுகிறோம். நாமோ ஒருபோதும் சிலையை வழிபடமாட்டோம், எப்படி நாம் அவ்வாறு வழிபட முடியும் என்று நினைக்கிறோம்.

**நவீன சிலைகள்:**

நாம் நினைப்பதற்கு மேலாக நம் வாழ்வில் நவீன சிலை வழிபாடு என்னும் சிக்கல் உண்டு. நாம் எதை நமது கடவுளாக நம்பி வழிபடுகிறோமென்று அறிய ஆவலா? எமது வியாபாரத்தை உற்றுநோக்குவோம். எவ்வாறு பணத்தைப் பெற்றோம், எப்படிச் சேமித்தோம், எப்படிச் செலவு செய்தோம். இது நமக்குப் பணத்தின்மீதுள்ள அதீத அக்கறையை எடுத்துக் காட்டுகிறதல்லவா?

சிலை வழிபாடு என்றால் என்ன? என்ற தெளிவு நமக்கு வேண்டும். கடவுளின் இடத்தை ஒரு புனிதருக்குக் கொடுப்பதே சிலை வழிபாடு. உதாரணமாக புனித அந்தோனியாரே எம் கடவுள் என்று ஆராதிப்பது. நாம் புனிதரை வணங்குகின்றோம். ஏனென்றால், அவர்கள் எமக்காகப் பரிந்துபேசுபவர்களாகவும் இறைவனிடம் நாம் செல்ல எமக்கு வழிகாட்டுபவர்களுமாய் இருப்பதால். இது சிலை வழிபாடல்ல.

நவீன சிலைவழிபாடு பணத்தைவிட அதிகமானவற்றில் அடங்கியுள்ளது. அமெரிக்காவிலிருந்து வெளியிடப்படும். 'நியூஸ் வீக்' என்னும் சஞ்சிகையில் எலென் குட்மன் என்பவர் இது தொடராக எழுதுபவர். அவர் எழுதும்போது இவ்வாறு குறிப்பிடுகிறார். "எமது முன்னோர் பேசும்போது ஆன்மாவுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துப்பற்றிப் பேசினார்கள். நாமோ நமது உடலுக்கு ஏற்படும் ஆபத்துப்பற்றியே பேசுகிறோம். முன்னோர் தம் மரபில் விசுவாசம் வைத்தனர். நாமோ விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களிலேயே நம்பிக்கை வைத்துள்ளோம்."

எலென் குட்மன் ஒரு மறைபோதகரல்ல, ஒரு கிறிஸ்தவரோ என்றுகூட எமக்குத் தெரியாது. ஆனால், அவர் கூறும்போது பல நாடுகளில் எமது உடல் நலம்தான் எமது தெய்வமாகிவிட்டது என்று கோடிட்டுக் காட்டுகிறார். எமது முன்னோர் இறைவன் நம்மைக் காப்பாற்றுவார் என்று நம்பினர். நாமோ நமது மருத்துவர்தான் நம்மைக் காப்பாற்றுவர் என்று நம்புகிறோம்.

வாழ்வின் முக்கிய நிகழ்வுகளின்போது நாள், நட்சத்திரம் இன்று சோதிடத்தில் நம்பிக்கை வைத்திருப்பவர் எத்தனை பேர்? திருமண விழா, வீடு கட்டுதல், வீடு குடிபுகுதல் போன்ற நிகழ்வுகளின்போது நாள், நட்சத்திரம் பார்ப்பதற்கு முக்கியத்துவம் கொடுப்போர் எத்தனை பேர்? இதில் என்ன பிழையென்று சிலர் கேட்கலாம். இன்றைய சோதிடம், நாள், நட்சத்திரம் போன்றவற்றை பார்ப்பது நவீன சிலைவழிபாடுதான். சோதிடம் நம் முடிவை விண்மீன்தான் தீர்மானிக்கிறது என்று கூறுகிறது. விவிலியமோ இறைவன்தான் நம் முடிவைத் தீர்மானிக்கிறார் என்கிறது. இன்றைய சோதிடம், நாள், நட்சத்திரம் என்பவற்றைப் பார்ப்பது என்பவற்றில் தவறில்லை என்று பலர் வாதிடுவர். பொற்கன்றை வழிபட்ட அன்றைய இஸ்ராயேல் மக்களும் தாம் செய்தது தவறில்லை என்றே நினைத்தனர். ஆனால், இறைவன் அது தவறில்லை என்று நினைக்கவில்லை. பொற்கன்றை வழிபட்டதற்காக இறைவன் அவர்களைத் தண்டித்தார். அதே இறைவன் நாம் செய்யும் நவீன சிலைவழிபாட்டை தவறற்றது என்று கருதுவார் என்று எப்படி நினைக்கமுடியும்?

**இறைவனுக்குப் பதில் மலிவான மாற்றுப் பொருள்:**

பொருட்களுக்கு கூடிய மதிப்புக் கொடுக்கும்போது கடவுளுக்குரிய மதிப்பைக் குறைத்துவிடுகிறோம். பொருட்கள் எமது இதயத்திலிருந்து இறைவனை விலக்கும்பொழுது விளைவு விபரீதமாகிறது. இன்றைய மனிதன் நவீன சிலைவழிபாட்டில் விழுந்துவிடுகிறான். அவன் பொன்னாலான கன்றுக்குட்டியை விழுந்து வணங்கவில்லை. ஆனால், பணம், பதவி, சிற்றின்பம் என்பவற்றுள் சிக்குண்டு கிடக்கிறான். இதனால் அவனது உள்ளத்திலிருக்க வேண்டிய உண்மைத் தெய்வத்துக்கு இடமில்லாமல் போகின்றது.

நவீன சிலை வழிபாடுபற்றி ஆராயும்போது மனிதனின் ஆழ்மனத்தில் 'நான்' என்னும் வலு அவனை ஆட்கொள்வதைக் காணலாம். "நீங்கள் கடவுளுக்கும் செல்வத்துக்கும் பணிவிடை செய்ய முடியாது" (மத்.6:24) என்று இயேசு கூறும்போது 'செல்வம்' என்பது "ஒருவருள் இருக்கும் வலுவுள்ள சக்தியே" என்று இறையியலாளர் அலோசியஸ் பீரிஸ் கூறுகிறார். இது இறைவனுக்கு நேர் எதிரான ஒரு சக்தி என்று மேலும் அவர் விளக்குகிறார். இதைத்தான் உளவியலாளர் "ஈகோ" என்று கூறுகின்றனர்.

**முடிவுரை:**

இன்று நாம் பணப்பேராசை, அதிகார மோகம், சமூக இணையத்தளங்களின் அதீத ஈர்ப்பு என்பவற்றிற்குள்ளே சிக்குண்டு இவைதான் எம் தெய்வம் என்பதுபோல வாழ்வதை அப்பட்டமாகக் காண்கிறோம். குறிப்பாக தொலைக்காட்சிப் பெட்டியோடு ஒட்டிக்கொண்டிருந்து குடும்ப செபம், செபமாலை, குடும்ப தொடர்பாடல் என்பவற்றைக் கைவிடுவது கிறிஸ்தவ வாழ்வின் பெரும் பிரச்சினையாக இருக்கிறது. இவற்றிலிருந்து விடுபட்டு, மீண்டும் இறைவனுக்குரிய நேரத்தையும் மகிமையையும் கொடுக்கும்போதுதான் இன்று நாம் சாபங்களாகக் கருதும் அர்ப்பணமற்ற மேலோட்ட வாழ்வு, பாலியல் பிறழ்வுகள், குடும்பப் பிரச்சினைகள், பொருளாதார நெருக்கீடுகள், விரக்தி மனப்பான்மை, காலநிலை மாற்றங்கள் என்பன மாறும்.

மோயீசன் வரலாற்றுக்கு நாம் மீண்டும் செல்லும்போது அவர் தம் மக்களுக்காக இறைவனிடம் இரந்து மன்றாடுவதைக் காணலாம். அவர் இறைவனின் இதயத்துக்கு நெருக்கமானவராயிருந்ததால் இறைவனின் இரக்கத்தை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கக்கூடியதாக இருந்தது. "ஆண்டவரும் தம் எண்ணத்தை மாற்றிக்கொண்டு தம் மக்களுக்குச் செய்யப்போவதாக அறிவித்த தீங்கைச் செய்யாது விட்டுவிட்டார்." (வி.ப.32:14)

இன்று மோசேபோன்று பொதுநிலையினர், திருநிலையினர் இரு சாராரிடத்திலிருந்தும் இறைவன் திருமுன் இருகரம் விரித்து மன்றாடும் இறைமனிதர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது மேற்சொன்ன சாபங்கள் நீங்கி இறைவனின் இரக்கம் மக்கள்மேல் பொழியப்பட்டு நாம் வாழும் வாழ்வு இறைவனின் ஆசீர்வாதமாக மாறும்.

---

# புனிதர்களின் பாதையில்

## புனித பேர்க்மான்ஸ் அருளப்பர், சே.ச

*துறவி - (கி.பி. 1599 - 1621)*



**மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்**

இவர் பெல்ஜியம் நாட்டினர். டியெஸ்ட் என்ற சிற்றூரில் தோன்றியவர். மெக்ளின் என்ற நகரில் படித்தார். 17 வயதில் இயேசு சபையிற் சேர்ந்தார். ஈராண்டுகளுக்குப்பின் படிப்பைத் தொடர உரோமைக்கு அனுப்பப்பட்டார். அங்கு 1621ஆம் ஆண்டு குருமாணவராக இருந்தபோதே இறைவனடி சென்றார்.

"இந்த வயதில் நான் புனிதனாகாவிட்டால், எப்பொழுதும் புனிதனாக முடியாது" என்று இவர் கூறுவது வழக்கம்; பிளேக் நோயினால் உரோமையில் இறந்தார். இவரின் தந்தை தம் துணைவியாரின் மறைவுக்குப்பிறகு குருவானார்.

17 வயதில் ஜோன் தம் வாழ்க்கையைத் தெரிந்துகொள்வதில் ஒரு முடிவுக்கு வந்தார். "நான்கு மாதங்களாக இறைவன் எனது இல்லக் கதவைத் தட்டிக்கொண்டிருந்தார். ஓரளவுக்கு அதை நான் தட்டிக்கழித்து விட்டேன் என்றுதான் கூறவேண்டும். பலமுறை திவ்விய நன்மை அருந்தியபின் பல நற்செயல்கள் செய்ததின் பயனாகத் துறவறத்தை நாடி, அதில் இறைவனுக்கேற்ற வார்த்தைப்பாட்டை நான் சமர்ப்பிக்க விரும்புகிறேன். ஆனால் இதற்கு இறையுதவி மிகவும் தேவை. வழக்கமாக, உற்றாரும், பெற்றோரும், தாங்கள் விரும்புகின்றவர்கள், தங்களின் விருப்பத்திற்கேற்ப நடக்காவிடில் வருத்தப்படுகிறார்கள்.

ஆனால் நானோ, இவ்வாறு உணருகிறேன். இங்கே என் பெற்றோரும் உற்றார் உறவினரும் ஒரு பக்கம். மற்றொரு பக்கம் இறைவனும், ஆண்டவரின் அன்னையும் வீற்றிருக்கின்றனர். என்று வைத்துக்கொள்வோம். என் பெற்றோராகிய நீங்கள் என்னிடம், 'நாங்கள் உனக்காக உன் இளமை முதல் எடுத்துக்கொண்ட அயராத உழைப்பு, முயற்சிகளை முன்னிட்டு எங்களை விட்டுப் பிரியாதே' என்றீர்கள். அதேநேரம் ஆண்டவர் இயேசு கூறுகிறார்: 'என்னைப் பின்செல்; உனக்காகப் பிறந்தேன், நொறுக்கப்பட்டேன், முள்முடி சூட்டப்பட்டேன்! சிலுவையில் அறையப்பட்டேன், இதோ பார் ஐந்து காயங்களை! உனக்காகவே வேதனையுற்றேன். உனது ஆன்மா எனது தசையாலும் இரத்தத்தாலும் ஊட்டம் பெறவில்லையா? உனது நன்றி கெட்டதனம் உன்னை நாணத்துக்குள்ளாக்காதா? அன்புப் பெற்றோரே, நான் இவ்வாறு நினைக்குந்தோறும், என் உள்ளம் பற்றி எரிகிறது. இதனால் இந்த நொடியில் துறவறத்தில் சேர்ந்துவிடலாமா என்ற விருப்பம் வருகிறது. என்னால் அன்புசெய்யப்பட்டவரை அடையும்வரை அமைதியிழந்தவனாய் இருக்கிறேன்."

## கலை இலக்கியச் சாளரம்

# கவிதைக் களம்

## ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகையின் ஆயர்த்துவ வெள்ளி விழாக் கவிதை

எழுத்துரு:
அபீர்ராஜன் (அன்ரனி பீற்றர்),
ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர், யாழ்ப்பாணம்.



### வெண்பா வாழ்த்து

வா(ன்)னிறைவன் தானளித்த வரன்முறை வாரிசே
மன்னாரின் முத்தே மழைமுகிலே - அன்னையாம்
திருச்சபை பெற்ற யோசேப் ஆண்டகையே
திருமறை ஒளியே வாழ்க!

### விருத்தப்பா வாழ்த்து

பேரருட் பெருந்தகையே யோசேப் ஆண்டகையே
வெள்ளிவிழா நாயகனே போற்றியே புகழ்கின்றோம்
போரின் கெடுபிடிக்குள் புதிய பணியாக
பொறுப் பெடுத்தீர் மன்னார்மறை மாவட்டத்தை
சீரோடும் சிறப்போடும் இன்று மிளிர்ந்திட
தாய்போல மக்களுக்கு விசுவாச வாழ்வளித்தீர்
தீரமுடன் மந்தைகளைக் காத்திட இரவுபகல்
ஓயாது முழுமூச்சாய் அரும்பணி புரிந்தீர்.

ஆன்மிக வாஞ்சையுடன் அனைவரையும் ஒன்றிணைக்க
ஆலயங்கள் தோன்றும் குழுக்களை உருவாக்கி
தன்னார்வப் பணியாகச் சாட்சிய வாழ்வினிலே
எழுப்புதலைக் கொடையாக பெற்றுமே வளர்ச்சியுற்றார்
மன்னார் மறைமாவட்டம் எண்ணிறந் நன்மைகளை
அடைந்து பயன்பெற்றது உங்களின் காலத்திலே
என்னபணி யானாலும் ஆயனாய் உடனிருந்து
அருட்குருக்கள் வழியாக பொன்னரும் பணிபுரிந்தீர்.

ஏழையர்க்கு உதவிட வாழ்வுதயம் உருவாக்கி
இளையோரும் ஆற்றல் பெற ஏற்றவழிகள் செய்தீர்
ஆலயங்கள் அழகெழிலாய் அமையப் பெற்றிட
உதவிகள் நல்கியும் ஊக்கம் அளித்தீர்
வாழவழி தெரியாமல் அலைந்துலைந்த மக்களுக்கு
இல்லிடங்கள் அமைத்தே குடியிருக்க வழிசெய்தீர்
ஈழத் தமிழருக்கு இழைக்கப்படும் அநீதிகளை
எதிர்ப்புக்கள் மத்தியிலும் துணிவுடன் குரல்கொடுத்தீர்.

ஞானத் தந்தையே உம்பணிகள் வாழியவே!
ஞாலம் உம்குரலுக்கு செவி கொடுத்தது
வானவன் உரைத்தவாறே ஏழைகளை நேசித்தீர்
வருமிடர்கள் அத்தனையும் தாங்கியே வழியாய் நின்றீர்
கானக் குயில்போல எதிரொலித்த உம் குரல்
மோன நிலையினிலும் ''முதுசமே தமிழர்க்கு''
கானகச் செல்வி மரி எப்பொழுதும் துணையாயிருப்பாள்
வேண்டுகிறோம் உங்களுக்காய் பல்லாண்டு வாழியவே!

## மருத்துவக் குணங்கள் நிறைந்த அகத்திக்கீரை



1. சத்து மிகுந்த கீரைகளுள் அகத்திக் கீரை ஒன்று, உடலில் ஏற்படும் மூலாதாரமான நோய்களைக் குணமாக்க வல்லது. இதில் வைட்டமின் ஏ என்ற உயிர்ச்சத்தும், புரதம், இரும்பு மற்றும் சுண்ணாம்புச் சத்துக்களும், புரதம், இரும்பு மற்றும் வெப்பத்தைத் தணித்து குளிர்ச்சியை அளிக்க வல்லது.

2. உஷ்ணத்தினால் ஏற்படும் காய்ச்சல், வறட்டு இருமல் தும்மல் போன்ற தொல்லைகளிலிருந்து நிவாரணம் அளிக்க வல்லது.

3. வாத நோயையும் நீக்கும். கபம் அதிகரிப்பு இருந்தாலும் குறைக்கும் ஆற்றல் இதற்கு உண்டு.

4. இதயம், மூளை, கல்லீரல் மற்றும் சீரண மண்டல உறுப்புகளுக்கு வலிமையை அளிக்க வல்லது.

5. கடுமையான வயிற்றுவலி ஏற்பட்டால் அதைக் குணமாக்க அகத்திக்கீரையை வேகவைத்து, அதன் சாற்றுடன் சிறிது தேன் சேர்த்து சாப்பிடலாம்.

6. அகத்திக்கீரையை சமைப்பதற்கு முன் நன்றாக நீரில் அலசி கழுவ வேண்டும். பின் அதை நன்றாக வேகவைத்து பின்னர் உண்ண வேண்டும்.

7. அகத்திக் கீரையை வயிலிட்டு நன்றாக மென்று அரைத்துத் தின்ன வேண்டும், அரைகுறையாகச் சாப்பிட்டால் அஜீரணம் ஏற்பட்டுவிடும்.

8. நோயால் அவதியுற்று மருந்து சாப்பிடுபவர்கள் அகத்திக்கீரையை சாப்பிடக்கூடாது. அப்படி சாப்பிட்டால் மருந்தின் சக்தியை முறித்துவிடும்.

9. வயிற்றிலுள்ள புழு பூச்சிகளையும் கொல்லும். மதுபானப் பழக்கம் உள்ளவர்களும் அகத்திக் கீரையை சாப்பிடாமல் இருப்பது நல்லது.

# கொஞ்சம் சிரிங்க

**மோகன்:** எல்லாம் நல்லபடியாக நடக்க ஒரு மந்திரம் சொல்லித்தாங்க சாமி!!
**சாமியார்:** இந்த மந்திரத்தை சரியா சொல்லணும்! தப்பு தப்பா சொன்னா ஆளு குலோஸ்!
**மோகன்:** அப்படினா இந்த மந்திரத்தை என் பொண்டாட்டிக்கு சொல்லித்தாங்க சாமி!!!
..................................
**கமல்:** டேய் மச்சான் நேற்று உங்க வீட்டுக்கு போய் உன்ன எங்கண்ணு கேட்டேன், அதுக்கு உங்க அப்பா ''அந்த மாடு எங்கயாச்சும் மேயப் போய் இருக்கும்ணு சொன்னாரு'' எனக்கு ரொம்ப கஸ்ரமா போச்சுடா.....
**விமல்:** அதுகூட பரவாயில்லை மாப்பிள... நான் திரும்பி போனதும் உன்னைத் தேடி ''ஒரு எருமை'' வந்துச்சுன்னு சொன்னாருடா....
..................................
**மேனேஜர்:** ஆட்டு லோண் கேக்குறியே? என்ன அனுபவம் இருக்கு உனக்கு?
**வடிவேலு:** ஆட்டு கறின்னா எனக்கு உசுருங்க!!
வாரா வாரம் 2 கிலோ ஆட்டுக்கறி சாப்பிடுவேனுங்க!!
**மேனேஜர்:** ??
......................................
**டாக்டர்:** தண்ணியை காய்ச்சி வடிகட்டி குடிக்க சொன்னேனே செஞ்சியா?
**குமார்:** அப்படி செஞ்சதுக்குதான் போலீஸ் புடிச்சிட்டு போய்ட்டாங்க டாக்டர்!
**டாக்டர்:** ??
..................................
**மேனேஜர்:** வேலைக்கு தினமும் அரைமணி முக்கால் மணி லேட்டாவே வாறீங்களே..., ஏன்?
**தொழிலாளி:** நீங்கதானே, வேலைன்னு வந்துட்டா டைம் பார்க்கக் கூடாதுண்ணு சொன்னீங்க!
**மேனேஜர்:** ??
..................................
**நோயாளி:** டாக்டர் இடது கால் முட்டி ரொம்ப வலிக்குது.
**டாக்டர்:** வயசாயிடுதல்ல அதான்.
**நோயாளி:** வலதுகாலுக்கும் அதே வயதுதானே ஆகுது, ஆனா அது வலிக்கலியே!
**டாக்டர்:** ??....
..................................
**நோயாளி:** தினமும் ஒரு பச்சை முட்டை சாப்பிடனுமா.... என்னால முடியாது டாக்டர்.
**டாக்டர்:** ஏன் முடியாது?
**நோயாளி:** ஏன்னா எங்க கோழி தினமும் வெள்ளை முட்டைதான் போடும்.

## சமையல் குறிப்பு

### *மாம்பழ ரசமலாய்*



**தேவையானவை:**

பால் - 2 லீற்றர்
எலுமிச்சைச் சாறு - 2 மேசைக்கரண்டி
சீனி - 1 கப்
குங்குமப்பூ - 1 கரண்டி
துருவிய முந்திரி - 2 மேசைக்கரண்டி
ஏலக்காய்த்தூள் - 1 கரண்டி
மாம்பழம் - 60 கிராம் (நன்றாகப் பிசைந்தது)
அலங்கரிக்க...
மாம்பழத்துண்டுகள் - 1 கப்
பிஸ்தா - 1 மேசைக்கரண்டி (துருவியது)



**செய்முறை :**

ஒரு அகன்ற பாத்திரத்தில் 1 லீற்றர் பாலை ஊற்றி நன்றாகக் காய்ச்சவும். அதில் எலுமிச்சைச்சாறை ஊற்ற வேண்டும். எலுமிச்சைச்சாறு ஊற்றியவுடன் பால் திரிந்து, தண்ணீர் வேறாகவும் பால் வேறாகவும் பிரிய ஆரம்பிக்கும், அடுப்பை அணைத்துவிட்டு தண்ணீரை வடிகட்டி, திரிந்த கட்டியைத் தனியாக எடுத்து வைத்துக்கொள்ளவும். இதை மெல்லிய துணியில் போட்டு தண்ணீர் சிறிதும் இல்லாமல் வடிகட்டிக் கொள்ளவும்.

இதை மூடைபோல கட்டி குளிர்ந்த நீரில் அலசி எடுத்தால் எலுமிச்சைச் சாறால் ஏற்படும் புளிப்பு நீங்கிவிடும். ஒரு நாள் இரவு முழுவதும் இதை அப்படியே வைத்திருக்க வேண்டும். மறுநாள் இதை ஒரு வாயகன்ற பாத்திரத்தில் போட்டுக் கட்டி இல்லாமல் நன்றாக ரொட்டி மாபோல மசிக்க வேண்டும். பின்னர் சிறுசிறு உருண்டைகளாக உருட்டித் தனியே வைத்துக் கொள்ளவும். ஒரு சட்டியில் தண்ணீர் ஊற்றி சீனியைப் போட்டு சீனிப்பாகு தயார் செய்துகொள்ள வேண்டும்.

சீனிப்பாகு ஆறியவுடன் உருண்டைகளை அதில் போட்டு நன்றாக ஊற விடவேண்டும். 2- 3 நாள்கள் ஊறினால்தான் உருண்டை இரண்டு மடங்கு பெரிதாக வரும். சர்க்கரைப்பாகிலிருந்து உருண்டைகளை கையால் அழுத்தி நீர் இல்லாமல் தனியாக எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். மீதியுள்ள 1 லீற்றர் பாலை அடுப்பை சிம்மில் வைத்து பால் பாதியாக சுண்டும் வரை காய்ச்ச வேண்டும். அதில் குங்குமப்பூ, சிறிது சீனி, ஏலக்காய்த்தூள் போன்றவற்றைப் போட்டு காய்ச்சி எடுத்து நன்றாக ஆற விடவும். ஆறிய பாலில் ரசமலாய் உருண்டைகளைப் போட்டு அதன் மேல் துருவிய பிஸ்தா, முந்திரிகளை போட்டு அலங்கரிக்கலாம். சுவையான மாம்பழ ரசமலாய் ரெடி!

## மன்னா விளம்பரப் பலகை

''அழகான முகத்தைத் தேடாதே. அது உன் வாழ்வில் ஏமாற்றத்தை உண்டாக்கும்.
அன்பான இதயத்தைத் தேடு. அது உன் வாழ்வில் ஏற்றத்தை உண்டாக்கும்... ''

திருமண வாழ்வு சரியாய் அமையாவிட்டால் அதற்குக் காரணம் அங்கே இருக்கும் இரண்டு பிடிவாதங்கள்தான். எங்கோ இருக்கும் ஒன்பது கிரகங்கள் அல்ல.
............................
ஒரு பெண் கலங்கிய கண்களுடன் பிறந்த வீட்டிற்குச் செல்லும்போது அவள் கணவன் ஆண் என்ற தகுதியை இழந்துவிடுகின்றான்...!
............................
மகிழ்ச்சியாய் நீ வீணாக்கிய தருணங்களெல்லாம் வீணானவையல்ல!

எதுவுமே சரியில்லாதபோதும் எல்லாம் சரியாயிடும்னு நம்புவதுதான் வாழ்க்கை....!!!
............................
சந்தோஷம் இருக்கும் இடத்தில் வாழ நினைப்பதைவிட... நீ இருக்கும் இடத்தில் சந்தோஷத்தை உருவாக்கு. உன் வாழ்க்கை நிறைவாய் இருக்கும்.
............................
கண்ணீர் சிந்தும் கண்களைவிட அதை மறைத்துப் புன்னகை சிந்தும் இதழ்களுக்கே வலி அதிகம்.

வாழ்க்கையில் மகிழ்ச்சி என்பது
பிறரை மகிழ வைப்பதில்தான் இருக்கிறது.

விழுவதெல்லாம் எழுவதற்காகத்தானே தவிர
அழுவதற்கு அல்ல!

# திருவழிபாடு

## திருவழிபாடு பற்றிய கேள்வி பதில்களும் இறையியல் விளக்கங்களும்

### தொடர் 23 -

**6. தூய்மைமிகு நற்கருணை**

**"ஆண்டவரை மகிழ்ச்சியுடன் வழிபடுங்கள்! மகிழ்ச்சி நிறை பாடலுடன் அவர் திருமுன் வாருங்கள்" (திபா 100:2).**

**470. தூய்மைமிகு நற்கருணையை எழுந்தேற்றம் செய்வதற்கான திருச்சபையின் ஒழுங்குமுறைகள் என்ன?**

1. நற்கருணை வைக்கப்பட்டுள்ள கோவில்களில் அல்லது செபக்கூடங்களில் நற்கருணைக் கலத்தைக் கொண்டோ அல்லது கதிர்ப்பாத்திரத்தைக் கொண்டோ நற்கருணையை வழிபாட்டிற்கு வைக்கலாம்.

2. திருப்பலி நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது அதே கோவிலின் அல்லது செபக்கூடங்களின் ஒரு பகுதியில் நற்கருணையை ஆராதனைக்கு வைக்கக்கூடாது.

3. இக்கோவில்களிலோ செபக்கூடங்களிலோ ஆண்டுதோறும் நடைபெறுகின்ற நற்கருணை ஆராதனைக்குரிய நாளை ஆயர் அவர்கள் தமது மறைமாவட்டத்திற்கு என்று நிர்ணயிக்கலாம்.

4. நற்கருணையை ஆராதனைக்கு வைக்கவும் ஆசி வழங்கவும் அருள்பணியாளர் அல்லது திருத்தொண்டர் பொருத்தமானவர்களே. ஆனால் குறிப்பிட்ட சூழ்நிலைகளில், நற்கருணை ஆசி வழங்காமல் ஆராதனைக்கு மட்டுமே எடுத்து வைக்கவும், அதை மீண்டும் நற்கருணைப் பேழைக்குள் வைக்கவும் பீடத் துணைவர், நற்கருணை அசாதாரணப் பணியாளர் அல்லது தலத்திருச்சபை ஆலுநரால் நியமிக்கப்பட்ட வேறொருவர் தகுதியானவரே.

5. ஆயரின் அனுமதியால் நற்கருணையை எங்கே வெளியரங்கப் பவனியாக எடுத்துச் செல்லமுடியுமோ அங்கே அந்நிகழ்ச்சி நடைபெறலாம்.

**471. தொடர் ஆராதனை/ தொடர் காட்சிப்படுத்துதல் விளக்குக.**

**- தொடர் ஆராதனை (Perpetual Adoration):-** கோவிலில் நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டு ஆராதனை நடைபெறும். இது தொடர்ந்து 24 மணி நேரமோ 48 மணி நேரமோ குறிப்பிட்ட கால அளவு உடையதாக இருக்கும். ஆனால் அங்கு மக்கள் தொடர்ந்து ஆராதனை புரிய வேண்டும்.

**- தொடர் காட்சிப்படுத்துதல் (Perpetual Exposition):-** இது ஆள்களே இல்லாமல் நற்கருணையை மட்டுமே எழுந்தேற்றம் செய்து வைப்பது

**குறிப்பு:-** இது சரியல்ல.

**472. ஆராதனைச் சிற்றாலயம் (Adoration Chapel) என்பது என்ன?**

நற்கருணையைக் காட்சிப்படுத்தி, அதை நாள் முழுவதும் மக்கள் சந்தித்து ஆராதிப்பதற்காக எழுப்பப்படுகின்ற புனித இடம். ஆனால் இது நற்கருணையைச் சந்திக்கிற இடமாக (தமிழகத்தில்) மாறிக் கொண்டு வருகிறது. மாறாக, எப்பொழுதும் மக்கள் அங்கே ஆராதனை செலுத்த வேண்டும் என்பதுதான் இதன் நோக்கம்.

**473. நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டிருக்கும் போது மறையுரை வழங்கலாமா?**

சிறியதொரு மறையுரை வழங்க அனுமதிக்கப்படுகிறது (Euchaistic Worship Outside Mass, No.95) மறையுரை நற்கருணை மறைநிகழ்வைப் பற்றியதாக இருக்க வேண்டும். நற்கருணைக் கதிர்பாத்திரத்திற்குமுன் நம் கவனத்தைச் சிதறடிக்கக்கூடிய விதத்தில் எதையும் வைக்கலாகாது!

**474. நற்கருணைக் கதிர்பாத்திரத்தை எப்படி அரங்கேற்றம் செய்வது?**

1. நிரந்தர அரியணை ஒன்று இருக்கலாம், அதே சமயத்தில் அது மிகத்தொலைவில் இருக்கக்கூடாது.

2. எனவே பீடத்தில் திருமேனித்துகில் ஒன்றை விரித்து அதன்மேல் கதிர்பாத்திரத்தை வைக்கவும். தற்காலிக அரியணை ஒன்றின்மேல் கதிர்பாத்திரத்தை வைப்பது நற்கருணை ஆராதணைக்கு இன்னும் சிறப்பினைச் சேர்க்கும்.

**475. நற்கருணை எழுந்தேற்றத்தின் போது எத்தனை எரியும் மெழுகுத்திரிகள் இருக்க வேண்டும்?**

- கதிர்பாத்திரத்தோடு தூய நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்படும்போது குறைந்தது நான்காவது இருக்க வேண்டும். அதிகமாக ஆறு மெழுகுதிரிகள் இருக்கலாம். (Euchaistic Worship Outside Mass, No.85) மிகச்சிறப்பு பெருவிழாக்களின்போது இன்னும் அதிக எண்ணிக்கை சேர்க்கப்படலாம்.

- நற்கருணைக் கலத்தோடு சாதாரணமாக எழுந்தேற்றம் செய்யும்போது இரண்டு மெழுகுத்திரிகள் போதுமானவை.

- எவ்வாறாயினும் நல்ல, தரம் வாய்ந்த மெழுகுத்திரிகள் தேவை.

- எழுந்தேற்ற நேரம் அதிகமாக எடுத்துக்கொள்ளப்படுமானால், எண்ணெய் விளக்குகள் பொருத்தமானவை. ஆனால் மின் ஒளியாலான விளக்குகள் இதற்கு பொருத்தம் ஆகாது.



**476. அருள்பணியாளர் தவிர வேறொருவர் நற்கருணை ஆசி வழங்கலாமா?**

பொதுவாக நற்கருணையை எழுந்தேற்றம் செய்து வைப்பதன் நற்கருணையின் அசாதாரணப் பணியாளர் அருள்பணியாளர் அல்லது திருத்தொண்டர் என்கிறது திருச்சபை சட்டம் (943).

அதேநேரத்தில், சிறப்பான சமயங்களில் பீடத்துணைவர் அல்லது திருத்தொண்டர் என்கிறது திருச்சபை சட்டம் (943).

அதேநேரத்தில், சிறப்பான சமயங்களில் பீடத்துணைவர் அல்லது நற்கருணையின் அசாதாரணப் பணியாளர் அல்லது ஆயரால் நியமனம் செய்யப்பட்டவர் நற்கருணை ஆராதனைக்காக அதை எழுந்தேற்றம் செய்து வைக்கலாம். அதை மீண்டும் நற்கருணைப் பேழைக்குக் கொண்டுசெல்லலாம். ஆனால் அருள்பணியாளர், திருத்தொண்டர் தவிர வேறு யாரும் நற்கருணை ஆசி வழங்க முடியாது.

**குறிப்பு:** நற்கருணை ஆராதனைக்காக நற்கருணைப் பேழையைத் திறந்து வைக்கவோ நற்கருணைச் சிமிழ், நற்கருணை கலம் ஆகியவற்றை வெளியே எடுத்து வைக்கவோ அந்தந்த ஆயரின் அனுமதியை இவர்கள் பெற வேண்டும் (திச. 943).

**இறை அன்பும் இறை வார்த்தையும்**

"உமது அன்பின் அம்பால் எங்கள் உள்ளங்களை ஊடுருவினீர்: உமது வார்த்தையின் அம்பால் எங்கள் சிந்தனைகளை ஊடுருவினீர்."

**7. பக்தி முயற்சிகள்**

**"நான் என்றும் நம்பிக்கையோடு இருப்பேன்; மேலும் உம்மைப் புகழ்ந்து கொண்டிருப்பேன்" (திபா. 7:14)**

**477. நற்கருணைப் பக்தி தோன்றக் காரணங்கள் யாவை?**

மத்திய காலத்தில் திருப்பலி அருள்பணியாளர்களின் தனிக் கொண்டாட்டமாகவும், அதன் மொழி மக்களால் புரிந்துகொள்ள முடியாததாகவும் இருந்ததால், அவர்கள் தங்கள் கவனத்தைப் புதிய (பக்தி) முயற்சிகளுக்கு இட்டுச்சென்றனர்.

அதில் ஒன்றுதான் நற்கருணைப் பக்தி, அதாவது, திருப்பலி முழுவதிலும் பங்கு பெறவில்லையென்றாலும்கூட, நற்கருணை எழுந்தேற்றத்தையாவது பார்த்தால் போதும் என்ற (தவறான) எண்ணம்தான் நற்கருணைப் பக்திக்கு வழிகோலியது எனலாம்.

**478. நற்கருணைப் பக்தியின் விளைவாக எழுந்த நற்கருணை வழிபாடுகள் யாவை?**

- நற்கருணைச் சந்திப்பு: • நற்கருணை ஆராதனை
- நற்கருணை ஆசி • நற்கருணைப் பவனி

**479. புனித மரியா வணக்கம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது? அதற்கு உரிய திருச்சபையின் அதிகாரபூர்வமான பிரகடனம் என்ன?**

கி.பி. 431இல் எபேசு திருச்சங்கத்தில் மரியா வணக்கம்பற்றிப் பேசப்பட்டது.

**இதைப்பற்றித் திருச்சபை ஆசிரியம் தந்துள்ள நம்பிக்கைக் கோட்பாடுகள்:**

1. மரியா : என்றும் கன்னி (கி.பி. 325)
2. மரியா : கடவுளின் தாய் (கி.பி. 432)
3. மரியா : அமல உற்பவி (கி.பி. 1854)
4. மரியா : விண்ணேற்பு (கி.பி. 1950)

**480. செபமாலை சொல்லும் பழக்கம் எங்கிருந்து உதயமாகியது?**

12ஆம் நூற்றாண்டில் 'ஆண்டவர் கற்றுத்தந்த இறைவேண்டலும்' 'அருள்மிகப்பெற்ற மரியே வாழ்க' என்ற இறைவேண்டலும் அக்கால கத்தோலிக்கர்களால் சொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது. இந்த நூற்றாண்டில்தான் துறவற மடங்களில் துறவியர் 150 திருப்பாடல்களைச் சொல்லி வந்தனர். அதற்குப் பதிலாக சாதாரண மக்கள் 150 தடவை 'ஆண்டவர் கற்றுத்தந்த இறைவேண்டல்' அல்லது அருள்நிறைந்த மரியே' என்ற வேண்டலை சொல்லியிருக்கின்றனர்.

புனித மரியாவே புனித தோமினிக் குஸ்மான் என்பவரிடம் செபமாலையைக் கொடுத்ததாகவும் அதைப்பற்றிப் போதிக்கச் சொன்னதாகவும் பக்தி மரபு சொல்கிறது.

1507இல் 15 தடவைச் சொல்வதை மூன்று ஐம்பதாகப் பிரித்துள்ளனர். ஐம்பது மறை உண்மைகளைத் தியானித்து, ஒவ்வொன்றுக்கும் இடையில் 'ஆண்டவர் கற்றுத்தந்த இறை வேண்டலையும் 'அருள்மிகப் பெற்ற மரியே வாழ்க' எனும் வேண்டலையும் மாறி மாறி சொல்லியிருக்கின்றனர். பின்னர் இந்த ஐம்பது மறையுண்மைகள் ஐந்து மறையுண்மைகளாக மாறி, பின் மகிழ்ச்சி, துயர, மாட்சி மறை உண்மைகளைக் கொண்டதாக விளங்கின. இந்த 15 மறை உண்மைகள் 'ஆண்டவர் கற்றுத்தந்த இறைவேண்டலுக்கும் அருள்மிகப்பெற்ற மரியே வாழ்க' எனும் இறைவேண்டலுக்கும் முன்னுரைகளாக விளங்கின.

திருத்தந்தை 5ஆம் பீயுசுதான் 1569இல் ஓர் ஆவணம் வழியாக செபமாலைக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளார். 1572இல் செபமாலை திருவிழாவை அக்டோபர் 7ஆம் திகதி கொண்டாடப் பணித்தார். 'செபமாலைத் திருத்தந்தை' என அழைக்கப்படுகின்ற 13ஆம் லியோ (1878 – 193) அக்டோபர் மாதம் செபமாலை மாதமாகக் கொண்டாட அழைப்பு விடுத்தார்.

மரியன்னை லூர்து நகரிலும் பாத்திமா நகரிலும் காட்சி அளித்தபோது, செபமாலையோடு தோன்றியதாகவும் செபமாலை சொல்லத் தூண்டியதாகவும் நம்பப்படுகிறது.

2002இல் திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் ஒளியின் மறை உண்மைகளைப் புதிதாக வகுத்துத் தந்தார்.

**481. புனிதர்கள் மட்டில் உள்ள பக்தி முயற்சியை வளர்க்கவும் அவர்களைப்பற்றி அறிந்து கொள்ளவும் உதவியாய் இருப்பவை எவை?**

திருப்பலி, நற்கருணை மன்றாட்டுகள், திருவழிபாட்டு நாள்காட்டி, திருப்புகழ்மாலை, இறைவேண்டல்கள், மன்றாட்டுமாலை, நவநாள்கள், செபமணிகள் (Beads), நேர்ச்சி மெழுகுத்திரிகள், கலை, உருவப்படங்கள், திருப்பண்டங்கள், நினைவுப் பதக்கங்கள் (Medals), உத்திரியம், திருத்தலங்கள், புனிதர்கள் வாழ்வு பற்றிய இலக்கிய நூல்கள், மரபு வழி வரலாறுகள் (Folklore) முதலியன.

**482. புனிதர்களின் புனிதப் பொருளை ஏன் வணங்குகிறோம்?**

புனிதப்பொருள் புனிதர்களின் நினைவுச் சின்னம். அது புனிதர்களைப்பற்றி அறிந்துகொள்ளச் செய்வது மட்டுமல்லாமல் நமது உண்மை கிறிஸ்தவ வாழ்வுக்கு வழிகாட்டுதலும் அளிக்கிறது.

தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள் மறைசாட்சியரின் பொருள்களைப் பாதுகாத்து வணங்கி வந்தனர். அவர்களின் நினைவாக உள்ள புனிதப் பொருள்களைப் பீடத்தில் புதைத்தும் அதற்குரிய மதிப்பையும் வணக்கத்தையும் செலுத்தியுள்ளனர். அது பீடக் கல் (Altar – Stone) என அழைக்கப்பட்டுள்ளது.

புனிதப் பொருள்களைப் பின்வரும் சில காரணங்களுக்காக நாம் வணங்குகிறோம்:

1. நமது அன்பை வெளிப்படுத்த;
2. மதிப்பும் மரியாதையும் செலுத்த;
3. அவர்களின் உதவியையும் பாதுகாப்பையும் பெற;
4. அவர்களது வழியைப் பின்பற்ற

புனிதர்களுக்குச் செலுத்தும் வணக்கம்பற்றி இரண்டாம் வத்திக்கான் சங்கம் பின்வருமாறு கூறுகிறது:

"நாம் விண்ணகத் தூயோருக்கு அளிக்கும் அன்பின் உண்மைச் சான்றனைத்தும் தன் இயல்பாகவே 'தூயோர் அனைவருடையவும் மணிமுடியான' கிறிஸ்துவை நோக்கிச் சென்று அவரிலே முற்றுப்பெறுகிறது; இவர் வழியாகவே தம் தூயவர்களில் வியப்புக்குரியவரும், அவர்களில் மாட்சி பெறுகின்றவருமான கடவுளையும் நோக்கிச் சென்று முற்றும் பெறுகின்றது" (திரு 50).

**483. சிலுவைப் பாதை – என்பது என்ன?**

திருவழிபாட்டுக் கூறுகளில் ஒன்றாக இல்லையென்றாலும் இது பக்தி முயற்சிகளில் ஒன்றே. தனியாகவோ ஒரு குழுவாகவோ பங்குபெறலாம். இதை அருள்பணியாளரோ திருத்தொண்டரோ ஆன்மிக வழிகாட்டியோ பொதுநிலையினரில் ஒருவரோ வழிநடத்தலாம். இந்தப் பக்தி முயற்சி கிறிஸ்துவின் பாடுகளோடு இணைந்த மனித மீட்புக்கான வெற்றிப் பயணத்தைத் தியானிக்க உதவுகிறது. அவரது பாடுகளிலும் பங்குபெற சவால் விடுக்கிறது. இந்த பக்திச் செயல் குறிப்பாக தவக்காலத்தில் இன்னும் சிறப்பாக வெள்ளிக்கிழமைகளில் நடைபெறுகிறது.

**484. 'நவநாள்' எவ்வாறு ஆரம்பமாகிறது?**

நவநாள் என்பது ஒன்பது நாள்களைக் கொண்ட ஒரு தொகுப்பைக் குறிக்கும். ஒன்பது செப நாள்களைக் குறிக்கும். ஒன்பது நாள் வழிபாட்டிற்கு உரிய பின்னணி இதுதான்.

அ) கிறிஸ்து விண்ணேற்றம் அடைந்ததற்கும் தூய ஆவியார் இறங்கி வந்ததற்கும் இடைப்பட்ட ஒன்பது நாள்கள் சீடர்கள் மரியாவோடு இறைவேண்டலில் ஈடுபட்டது:

ஆ) பின்னர் மரியாவின் உதரத்தில் இயேசு ஒன்பது மாதங்கள் இருந்ததை நினைத்து ஒன்பது நாள்கள் கிறிஸ்தவர்கள் இறைவேண்டலைக் கடைப்பிடித்தது.

இ) நவநாளைக் கடைப்பிடிக்கிறவர்களுக்கு நிலையான பலன் உண்டு (indulgence) என்று திருச்சபை படிப்பித்தது. இதன் விளைவாக பல திருவிழாக்கள், இறந்த நம்பிக்கையாளர், புனிதர்கள் இவர்கள் முன்னிட்டு 35 வகையான நவநாள்களை திருச்சபை 1938ல் ஏற்படுத்தியது.

ஈ) 1968இல் கிறிஸ்து பிறப்பு, தூய ஆவியார் வருகை, புனித கன்னிமரியாவின் அமல உற்பவம் முதலிய நாள்களில் நவநாள் செய்யும் பழக்கம் உதயமாகியது.

**இறைவேண்டல்**

"நான் இறைவேண்டல் செய்யும் முன்னதாகவே பலமணி நேரம் இறைவேண்டலில் செலவிட வேண்டும்.

(அடுத்த இதழிலும் தொடரும்)

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.184

## I, II, III யோவான் திருமுகங்கள்

உங்கள் விடைகளை டிசம்பர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | 02 | | | 03 | | | 04 |
| | ❖ | ❖ | | ❖ | ❖ | | ❖ | ❖ | |
| | ❖ | ❖ | | ❖ | ❖ | | ❖ | ❖ | |
| 05 | | | 06 | | 07 | | | | 08 |
| | ❖ | ❖ | | ❖ | ❖ | | ❖ | ❖ | |
| | ❖ | ❖ | ❖ | ❖ | ❖ | 09 | ❖ | ❖ | |
| 10 | | | 11 | | | | 12 | | |
| | ❖ | ❖ | | ❖ | ❖ | | ❖ | ❖ | |
| | ❖ | ❖ | | ❖ | ❖ | 13 | ❖ | ❖ | |
| | | 14 | | | 15 | | | | 16 |

உங்கள் விடைகளை, ***குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 116/3, சென். ஜோசப் வீதி, பெற்றா, மன்னார்*** என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(— என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. இத்தகையோருக்கு உதவுவது ................ கடமை.
2. ................ விழவைக்கும் எதுவும் அவர்களிடம் இல்லை.
3. அவர்களுக்கு வாழ்த்தும் ........... வேண்டாம்.
6. அவரிடம் ........ எதைக் கேட்டாலும் பெற்றுக்கொள்வோம்.
7. ............. சகோதரியின் பிள்ளைகள் — கூறுகிறார்கள்.
10. பேசுவேன் என ........... பார்க்கிறேன்.
11. அவர் ............. மட்டும் அல்ல.
12. கடவுளிடம் வேண்டுதல் ........... வேண்டும்.
14. நாம் ........... பெறும் — அனுப்பினார்.
15. பழைய கட்டளைதான் ..............

### வலமிருந்து இடம்

2. ............... நமக்குத் தெரியும்.
3. மீட்புக்கும் — ............. வந்தார்கள்.
4. உண்டு ............ நீங்கள் அறிந்து — எழுதுகிறேன்.
6. கடவுள் இருப்பதுபோல் ........... இவ்வுலகில் இருக்கிறோம்.
8. உறுதியாக சார்ந்து நிற்க ............... என அவர் அறிவுறுத்துகிறார்.
11. ................ நம்பிக்கைக்கு உரியவர் என்பது தெளிவாகிறது.
12. நேர்மையாக ............ படுவோர் — புரிந்து கொள்வீர்கள்.
14. அன்பையும் கொண்டு ......... நமக்கு — உரித்தாகும்.
16. .............. காட்டவில்லையென்றால் — நிலைத்திருக்கும்.

### கீழிருந்து மேல்

5. ........................... அருளும் இரக்கமும் அமைதியும் உரித்தாகும்.
6. .............. செல்ல செல்ல — இது காட்டுகிறது.
8. ..................... யார் பொய்யர்?
9. ...................... செய்வோர் கடவுளைக் கண்டதில்லை.
10. தூண்டுதல் ............ என்பதை நாம் அறிந்துகொள்ளலாம்.
13. கிறிஸ்துவக் கொள்கையின் எல்லையை .............. செயலாகும்.
16. மீட்புக்கும் நல்லொழுக்கம் ...........போன்றவற்றுக்கும் — அவர்கள் கூறிவந்தார்கள்.

### மேலிருந்து கீழ்

1. .................. உள்ளத்தை அமைதிப்படுத்த முடியும்.
2. ................ இப்போதே அவன் உலகில் இருக்கிறான்.
3. தனியே வாழ்த்துக் ..................
4. இயேசு இறைமகன் .................... — யார்.
5. உண்மையிலிருந்து .................... என்பதாலுமே நான் எழுதியுள்ளேன்.
6. ..................... எழுத்து வடிவில் தர விரும்பவில்லை.
8. கற்பிக்க ........... தேவையில்லை.
9. ............... நாட்டங்களும் மறைந்து போகின்றன.
10. பாவம் செய்பவர் .................. அவரை — அறிந்ததுமில்லை.
11. ...................... இரத்தமுமே அவை.
13. சபையின் ................ செலுத்தும் அதிகாரம் வரவேற்கப்படவில்லை என்பது இது காட்டுகிறது.

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 182

### சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:



**முதலாம் பரிசு:**
B. அனற்ரா,
பெரியகடை, மன்னார்.



**இரண்டாம் பரிசு:**
அ. கொன்சலா,
பள்ளிமுனை,,
மன்னார்.

**மூன்றாம் பரிசு:**
B. அஞ்சலீனம்,
சிதம்பரபுரம்,
வவுனியா.

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 74 பேர்**
**சரியான விடைகளை எழுதியோர் 68 பேர்**

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 182ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

01. A.A. ஆக்காஷ், கொக்குப்படையான், சிலாபத்துறை
02. V. டிவைனா குரூஸ், லூக்காவீதி, தாழ்வுபாடு, மன்னார்.
03. றெஜினோல்ட், சிதம்பரபுரம், வவுனியா
04. கே. துளசிகா, பாண்டியன்குளம், வவுனியா
05. ஐ. இருதய மேரி, சிதம்பரபுரம், வவுனியா
06. க. மடோனா, சிதம்பரபுரம், வவுனியா
07. புஸ்பா சேவியர், உவர்மலை, திருகோணமலை.
08. திருமதி. புஸ்பா சேவியர், உவர்மலை, திருகோணமலை
09. P. மேரி கிறோஜன் பீரிஸ், 4ம் வட்டாரம், வங்காலை.
10. அ. அம்முகுட்டி, கொக்குப்படையான், சிலாபத்துறை
11. அ. அபிஷேக், கொக்குப்படையான், சிலாபத்துறை
12. A. அமறின் அபிநிஷா, கொக்குப்படையான்.
13. S. செபமாலை மார்க், 7ம் வட்டாரம், வங்காலை.
14. M. பிளன்ரீனா, கன்னியர்மட வீதி, மன்னார்.
15. N. சுலைக்ஷனா குருஸ், ஆனாள் நகர், வங்காலை.
16. A. அன்ரனி ஆக்காஷ், கொக்குப்படையான்.
17. P. மேரி மொட்வீனா பீரீஸ், 4ம் வட்டாரம், வங்காலை
18. A. அபிஷேக், கொக்குப்படையான், சிலாபத்துறை
19. ஜேம்ஸ் இலக்கியன், தோட்டவெளி.
20. A. பெர்ஜின், கொக்குப்படையான், சிலாபத்துறை.
21. தா. வியாகுல நாயகி, வேப்பங்குளம், தாஸ்கோட்டம்.
22. கிறிஸ்ரின் ஏஞ்சல் டலிமா, 1ம் வட்டாரம், பேசாலை.
23. சி. மேரி ஆன் சபீனா, அச்சுவேலி, யாழ்ப்பாணம்.
24. S. டென்சியா பெரேரா, 8ம் வட்டாரம், பேசாலை.
25. M.T. புஸ்பம் (மாலா) எமில்நகர்.
26. ஜேம்ஸ் இலக்கியன், தோட்டவெளி.
27. ஆ. நிரோன், சிறியகுருமட வீதி, மன்னார்.
28. அ. மெர்லின், பொன்தீவுகண்டல், முருங்கன்.
29. அ. வெனிஸ்ரா, வேதசாட்சிகள் கோவிலடி, தோட்டவெளி.
30. பி. அன்ரோவிதுஷன், கொக்குப்படையான், சிலாபத்துறை.
31. பி. ஆன் டினூசியா, கொக்குப்படையான், சிலாபத்துறை
32. S.A. டில்ஷான் றொய்ஸ், 1ம் வட்டாரம், வங்காலை.
33. S. ஜோசப், முருங்கன் கமம், முருங்கன்.
34. S.A. டில்ஷான் மொறாய்ஸ், 1ம் வட்டாரம், வங்காலை.
35. S.M. குலோஜினி மொறாய்ஸ், வங்காலை.
36. பா. தர்ஷினி, உயிர்த்தராசன்குளம், பறப்பாங்கண்டல்.
37. கிறிஸ்ரின் ஏஞ்சல் டலிமா, 1ம் வட்டாரம், பேசாலை.
38. N. துளக்சிகா, பள்ளக்கமம், முருங்கன்.
39. தேவிகா பத்மராஜா, மடுமாதா வீதி, பெற்றா, மன்னார்.
40. டெபோறா சௌமியா மோகன்ராஜ், மன்னார்.
41. குணமணி சேவியர், பெரியகடை, மன்னார்.
42. தொ. ஆன் நியூற்றினா லியோன், முத்தரிப்புத்துறை.
43 ஏ. மாகிறற், பனங்கட்டிக்கொட்டு, மன்னார்.
44. அ. டிலோஜன், சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
45. ராணி அரசரத்தினம், தபாற்கந்தோர் வீதி, மன்னார்.
46. பி. ஷெறின் ஸ்ரேனிக்கா பறுநாந்து, முத்தரிப்புத்துறை.
47. அ. ஓசின் சேபியா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
48. அ. டிலோஜனா, சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
49. ஜெ. நவந்தி, பொன்தீவுகண்டல், முருங்கன்.
50. கெ. சுவீற்ஷன் சுமித், பொன்தீவுகண்டல், முருங்கன்.

## மன்னார் மறைமாவட்ட மேய்ப்புப் .....

1ஆம் பக்கத் தொடர்ச்சி

இந்தச் சிறப்பு மையப்பொருளை அடிப்படையாக வைத்து இடம்பெற்ற மன்னார் மறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாட்டின் முதல் நாள் வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்ற முதல் அமர்வுக்கு தலைமன்னார் பங்குத்தந்தை அருட்திரு. தி. நவரெட்னம் அடிகளார் தலைமைதாங்கினார். இந்த அமர்வுக்கான உரையை "பொதுநிலையினரின் அழைப்பு" என்ற தலைப்பில் மன்னார் மறைமாவட்ட குடும்பப்பணி பொதுநிலையினர் ஆணைக்குழுவின் இயக்குனர் அருட்திரு. எஸ். தேவராஜா கொடுதோர் வழங்கினார். முதல் நாள் இரவுணவைத் தொடர்ந்து துறைசார் வல்லுனர்களுடனான கருத்துப்பகிர்வு இடம்பெற்றது.

இரண்டாம் நாள் சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு காலைச் செபம் மற்றும் திருப்பலியோடு நிகழ்வுகள் ஆரம்பமாகின. மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் திருப்பலியை ஒப்புக்கொடுத்து மறையுரையாற்றினார். காலை உணவைத் தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாம் அமர்வுக்கு சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் அவர்கள் தலைமை தாங்கினார். இந்த அமர்வுக்கான உரையை "பொதுநிலையினரின் பணிகள்" என்ற தலைப்பில் கொழும்பைத் தளமாகக்கொண்ட பேராசிரியர் யோகராசா அவர்கள் வழங்கினார். மூன்றாவது அமர்வுக்கு கலையருவி இயக்குனரும் மன்னா பதிப்பாசிரியருமான அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் தலைமை தாங்கினார். இந்த அமர்வுக்கான உரையை "பொதுநிலையினரின் உருவாக்கம்" என்ற தலைப்பில் கட்டைக்காடு பங்குத்தந்தை அருட்திரு. பி. எவ். டெஸ்மன் குலாஸ் அடிகளார் வழங்கினார்.

ஒவ்வொரு உரைக்குப் பின்னரும் குழு ஆய்வுகள் இடம்பெற்றன. மதிய உணவைத் தொடர்ந்து இறுதி நிகழ்வாக பகல் 1.30 மணிக்கு பொது அமர்வு இடம்பெற்றது. இந்த அமர்வுக்கு மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. விக்ரர் சோசை அடிகளார் தலைமை தாங்கினார்.

இம்மாநாட்டின் செயலாளராகச் செயற்பட்ட மறைக்கல்வி இயக்குனர் அருட்திரு. றெஜினோல்ட் அடிகளார் இந்த மாநாட்டிற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். குருக்கள் மன்றச் செயலாளர் தேவன்பிட்டி பங்குத்தந்தை அருட்திரு. அருட்குமரன் அவர்கள் மாநாட்டு நிகழ்வுகளை நெறிப்படுத்தினார்.

## வீதி அபிவிருத்தி அதிகார......

6ஆம் பக்கத் தொடர்ச்சி

தாம் ஓய்வு பெறும்வரை இவர் உத்தியோஸ்தர்கள் ஊழியர்களின் உறுதுணையுடனும், அர்ப்பணிப்புடனும், ஈடுபாட்டுடனும் செயலாற்றினார்.

இவர் காலத்திலேயே போர் ஓய்வடைந்த பின்பு மடுக்கோவில், திருக்கேதீஸ்வரக் கோவில், செபஸ்ரியார் கோவில் இன்னும் பல பாடசாலைகளின் வீதி புனரமைப்பு மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் பாடசாலைகள், கோவில்கள் மறுமலர்ச்சி பெற்றன. வீதியில் பயண நேரங்கள் கணிசமான அளவு குறைக்கப்பட்டு மக்களுக்கு உண்மையானதும், பாதுகாப்பானதுமான போக்குவரத்து சேவை செய்துகொடுக்கப்பட்டது.

தற்சமயம் எந்திரி S.A.J. டபேரேரா புதிய வீதி அபிவிருத்தி அதிகார சபையினுடைய மன்னார் மாவட்ட நிறைவேற்றுப் பொறியியலாளராக கடமை ஏற்றுள்ளார். எனவே திரு. றோய் ஜிப்றி அவர்களின் உடல் ஆரோக்கியத்திற்கும் குடும்பத்தின் மேம்பாட்டிற்கும் மடு அன்னையை வேண்டி நிற்கின்றோம்.

தகவல் : உத்தியோகஸ்தர்கள், ஊழியர்கள்,
வீதி அபிவிருத்தி அதிகார சபை, மன்னார்.

## ஆயிரம் கவிஞர்கள் கவிதைகள் ......

4ஆம் பக்கத் தொடர்ச்சி

இரணைஇலுப்பைக்குளம் சக்திவேல் துஷாந்தனின் "இழப்புகளும் கசப்புக்களும்", மன்னார் ந. பிரதீப்பின் "மாயா", விடத்தல்தீவு உனவஸ்கனியின் "குருதியில் நிறம் தீட்ட வேண்டாம்", மன்னார் ஏ.சீ.எம் கொண்சீற்றாவின் "சொல்லித்தந்த வானத்திற்காய்", மன்னார் சிவகௌரி புஸ்பராஜனின் "டெங்கும் நுளம்பும்", வங்காலை சீமான் பத்திநாதன் பர்னாந்தின் "மேன்முறையீடு", மன்னார் பெரியகமம் பி. அமல்றாஜின் "ஏகாந்த மழை", தோட்டவெளி பேனாட் லெஸ்லியின் "குடும்பம்", மன்னார் அமுதின் "பெப்ரவரி 14" மன்னார் பெனிலின் "கைதாகும் எலும்புக்கூடுகள்", அடம்பன் வை. கஜேந்திரனின் "பெண்ணாய் இரு", சிலாவத்துறை ஹாமிட் முகமட் சுனஹப்பின் "காலத்தின் காதல் ஆங்கிலம்" பெரிய மடு செந்தூரனின் "கண்காணும் கடவுள்" ஆகிய பதினாறு கவிதைகள் கவிநூலை அணிசெய்கின்றன. முல்லை மைந்தன் யோ. புரட்சியின் கவிப்பணி சிறக்க மன்னாவின் வாழ்த்துக்கள்.

## இலங்கை கல்வி அமைச்சினால் ......

9ஆம் பக்கத் தொடர்ச்சி

மன்னா பத்திரிகை ஒரு மாதாந்தக் கத்தோலிக்க செய்திப் பத்திரிகையாக இருந்தாலும் அது மன்னார் மறை மாவட்டத்திற்குள்ளும், இலங்கையின் ஏனைய மாவட்டங்களிலும், வெளிநாடுகளில் உள்ள கத்தோலிக்க மக்கள் மத்தியிலும் விநியோகிக்கப்படும் பத்திரிகையாக உள்ளது. இலங்கையின் ஏனைய தமிழ் மறைமாவட்டங்களில் இருந்து வரும் கத்தோலிக்க பத்திரிகைகளில் வடிவமைப்பிலும், உள்ளடக்கத்திலும், தொகையிலும் உயர்ந்த நிலையில் நிற்கும் பத்திரிகையாக, பலரது பாராட்டையும் பெற்றுள்ள பத்திரிகையாக மன்னா விளங்குகின்றது. தமிழ் நேசன் அடிகளாரின் இந்த நீண்டகாலப் பத்திரிகைப் பணியைப் பாராட்டும் வகையிலேயே இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

"அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார் ஊடகத்துறையில் ஆற்றிய மேன்மையான பணிகளையும், ஊடகத்துறைக்கு வழங்கிய முதன்மையான பங்களிப்பையும் பாராட்டும் வகையில் வழங்கப்படும் வாழ்நாள் சாதனையாளர் விருது" என விருதுக் கேடயத்தில் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளது.


## மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே, உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள். சில விநியோகஸ்தர்கள் மன்னாவைக் காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம்.

பங்கு மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில் பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள் அல்லது பொதுநிலைப் பணியாளர்கள் இது விடயத்தில் அதிக அக்கறை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். - **மன்னா நிர்வாகம்.**

## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுகள், திருமண யூபிலி, பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

**கட்டணம் :**
கறுப்பு வெள்ளை 4,500/=, கலர் 7,500/=

## மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

# நீங்காத நினைவுகள்

## 02ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 24 07 1976



உதிர்வு 10 11 2015

### திரு. மு. சந்திரமோகன் (றெஜி)
(சகாய வீதி, அடம்பன்)

பல்லாண்டு மகிழ்ந்திருப்போம் என நினைத்தோமப்பா
ஈராண்டாய் உமை இழந்து தவிக்கின்றோமப்பா
காலங்கள் பல கடந்து போனாலுமப்பா
கடைசிவரை உம் நினைவு மங்காதப்பா
கவலை, கஸ்ரம், துன்பம், பகிர
நீங்கள் எம்மோடு இல்லாமல் போனீர்களப்பா!

வலிகளை நீர் சுமந்து வழிகளை எமக்குக் காட்டினீர்
இன்று ஆயனில்லா ஆடுகள்போல் அந்தரிக்கின்றோமப்பா
நித்தமும் உம் அன்பைப் பெற்றிட ஆசிக்கின்றோம்.
எமக்காக மன்றாடுங்கள் அப்பா.
நித்தியமாய் நின்ஆன்மா இளைப்பாற
நித்தமும் இறைவனை இறைஞ்சுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,**
அன்பு மனைவி, பிள்ளைகள்,

## 08ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 09 05 1952



உதிர்வு 17 11 2009

### திரு. மோசேஸ் மொத்தம் தர்மதாசன்
(உயிர்த்தராசன்குளம், முருங்கன்)

**“ஆண்டவரிடம் அச்சம் கொள்வோரது முடிவு மகிழ்ச்சிக்குரியதாய் அமையும். அவர்கள் இறக்கும் நாளில் ஆசீர் பெறுவாராக!” (சீராக் 1:13)**

வாழ்வு எனும் பெருங்கொடையால்
யாவரையும் வாழ்வித்து
மரணம் எனும் துன்பத்தால் - எமைத்
துயரத்தில் ஆழ்த்தினீர்.
இறைவா, நீர் எம்மிடமிருந்து
அழைத்துக்கொண்ட எம்
அன்புத் தந்தையின் ஆன்மா
உம்மில் இளைப்பாற
உமதடி வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,**
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், குடும்பத்தினர்

## 02ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 03 09 1948



உதிர்வு 13 11 2015

### திரு. மரியாம்பிள்ளை டோமினிக்
(றெயின்போ வீதி, பெற்றா, மன்னார்)

**“உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே. என்னிடம் நம்பிக்கைகொள்பவர் இறப்பினும் வாழ்வார்” (யோவான் 11:25-26)**

ஆண்டு இரண்டு கடந்தது அப்பா ஆறாத்துயர் அடிமனதில்!
நேர்மையுடன் பயமின்றி மனித நேயத்துடன் அமைதியாய்
சுதந்திரமாய் வாழ்ந்து சென்றீர்!
அழியாத காவியமாய் இவற்றை எமக்கு விட்டுச் சென்றீர்.
இறப்பினும் வாழ்பவராய் இறைபதம் நின்று
இறையருளில் நாம் வாழ இனியவராம்
ஆண்டவரை வேண்டிடுவீர்.
“இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றில் நின்ற துணை”

**பிரிவால் நினைந்துருகும்:**
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

# நாடகக் கலைவழி நற்செய்திப்பணி

**வேதியார். இ. யக்கோவு சேரம்,**
**ஆய்வாளர், மன்னார் மறைமாவட்டம்.**

நமது ஈழத்திருநாட்டில் நற்செய்திப் பணியாற்றி, நம்பிக்கை வாழ்வை வளர்ந்தோங்கச் செய்தவர் ஈழத்தின் திருத்தூதர் தூய யோசவ்வாஸ் முனிவராவர். இவரது வாழ்வையும், இறைபணிச் சிறப்பையும் ஆய்ந்து அறிந்து, இறைமக்கள் அனைவரும் அதைத் தமது வாழ்வாக்கிக்கொள்ள இவ்வாண்டு ஈழத்திருச்சபையால் நமக்குத் தரப்பட்டுள்ளது.

தூய யோசவ்வாஸ் ஆண்டின் இறுதிக்கட்டத்தில் நாம் நடைபோட்டுக்கொண்டிருக்கின்றோம். இவ்வாண்டைச் சிறப்பிக்க திருநிலையினராலும் பொதுநிலையினராலும் பலவகையான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவிட்டன. இதற்காகப் பலர் ஆர்வத்துடனும், அர்ப்பணிப்புடனும் உழைத்திருக்கின்றார்கள். தியானங்கள், ஆய்வரங்குகள், பாசறைகள், கலைநிகழ்வுகள், கண்காட்சிகள், பட்டிமன்றங்கள், போட்டிகள், இந்திய ஈழத் திருப்பயணங்கள், ஒன்றுகூடல்கள், ஊடக விளம்பரங்கள், நூல் வெளியீடுகள், வழிபாடுகள், பேரணிகள் போன்றவை இவற்றுள் அடங்கும்.

இவையனைத்தாலும் எண்ணற்ற பயன்கள் விளைந்துள்ளன. இவை யாவும் இறைமகன் இயேசு, எம்மவரிடம் விட்டுச்சென்ற இறையாட்சிப் பணியின் மகிழ்ச்சிக்குரிய அடையாளங்களாகும்.

தூய யோசவ்வாஸ், நற்செய்திப்பணியின் கருப்பொருளான இயேசுவின் இறப்பு, உயிர்ப்பு, மறுவருகை என்பவற்றை மக்கள் மனதில் பதியவைக்க, மக்களிடையே பலவகைக் கலைகளைப் பயன்படுத்தியுள்ளார். அவை ஓவியம், சிற்பம் இயல் இசை நாடகம், மூலிகை மருத்துவம் போன்றனவாகும். நமது மன்னார் மறைமாவட்ட இறைமக்களால் தூய யோசவ்வாஸ் காலத்திலிருந்து இன்றுவரை இவையனைத்தும் பின்பற்றப்பட்டு வருகின்றன. எம்மிடையே காணப்படும் மூப்பர்கள், புலவர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், அண்ணாவிமார், எழுத்தாளர்கள், மூலிகை மருத்துவர்கள் இதற்குச் சான்றாக இயங்குகின்றனர். இவர்கள் யாவரும் இறையாட்சியை நிலைநாட்டிய நற்செய்திப்பணியாளர்கள் என மதிக்கப்படத்தக்கவர்கள். இவர்களுக்குரிய சிறந்த கைமாறைக் கடவுள் கனிவுடன் வழங்குவார்.

நமது மண்ணில் கலைவழி நற்செய்திப்பணி தொடர்ந்து ஆற்றப்பட்டு வருவது மகிழ்ச்சிக்குரியது. இது நம்மிடையே நாடகம், வாசாப்பு, நாட்டுக்கூத்து எனும் நிகழ்வுகள் வழியாக முன்னெடுக்கப்படுகின்றது. இவ்வரிய கலையை கிறீஸ்துவின் விழுமியங்களுக்கு அமைய உருவாக்கம் செய்யப் பணித்தவர் தூய யோசவ்வாஸ் முனிவராவர். இவரது எண்ணக் கருவையும் அதற்கான அடிகோலையும் நிகழ்வாக்கியவர் யோசவ்வாஸ் முனிவரது உடன் உழைப்பாளரும் மறைபரப்புப்பணியின் பொறுப்பாளரும் கத்தோலிக்க கிறீஸ்தவ இலக்கியங்களின் தந்தை எனும் சிறப்பைப் பெற்றவருமான அருட்திரு. யாக்கோமே கொண்சால்வேஸ் அடிகளாராவர்.

நம்மிடையே தோன்றித்துலங்கிய நூற்றுக்கு மேற்பட்ட புலவர் பெருமக்களால் ஆக்கப்பட்ட நாடக இலக்கியங்கள் போன்றவற்றுக்கான கதைகளையும், கருத்துக்களையும், உருவாக்கத்துக்கான வழிகாட்டல்களையும் வழங்கி கலைவழி நற்செய்திப்பணிக்கு அடித்தளமிட்டவரும் இவரேயாவர்.

கத்தோலிக்க கிறீஸ்தவ நாடகங்களால் விளையும் நன்மைகள் சொல்லிலடங்கா. அவை, இது தொடர்பானவர்களுக்கு உடல், மன நலத்தையும், ஆன்ம



பலத்தையும், சமூக மேம்பாட்டையும் தருவதோடு, இறை மாட்சியையும் ஏற்படுத்துகின்றது. மேலும் நாடகப் படைப்பாளரின் மேன்மையையும், நற்செய்திப்பணியின் சிறப்பியல்புகளையும் எடுத்துக்காட்டி, புலவரின் புகழையும் ஓங்கச் செய்கின்றது.

கிராமங்களிலும் பங்குத்தளங்களிலும் ஓர் நாடகத்தை அரங்கேற்ற முயற்சி எடுப்பவர்கள், ஊக்குவிப்பாளர்களான தலைவர்கள், சமூகப்பெரியார்கள், அருளாட்சியாளர்களின் எண்ணங்கள், எதிர்பார்ப்புகள், இலக்குகள் என்பன நிறைவேறுகின்றன. நாடக அரங்கேற்றத்திற்காகப் பாடுபடும், பங்கேற்கும் படைப்பாளர்கள், பயிற்றுவிக்கும் அண்ணாவிமார், ஏட்டுக்காப்பாளர்கள், பாடல்கள் பயிற்றுவிப்போர் போன்ற வளவாளர்கள், நடிகர்கள், ஒப்பனையாளர்கள், நிதி, பொருள், உடல் உழைப்புகளை வழங்குவோர், ஒழுங்கமைப்பாளர்கள், நிர்வாகத்தினர், ஒலி, ஒளி அமைப்பாளர்கள், ஊடகவியலாளர்கள் போன்ற பல்வகைச் செயற்பாட்டாளர்களுக்கும் இடையே, ஒருங்கிணைந்த உறவு, புரிந்துணர்வு உருவாகின்றது.

மேலும் இதில் இணைந்து செயலாற்றும் பல மறையினர், பண்பாடுகளையுடையோர், மரபுகளைச் சார்ந்தோர், துறைகளைச் சார்ந்தோர் ஈடுபடுவதால், இதன்வழி உரைக்கப்படும் உண்மைகள் உணரப்படுகின்றன. புதியவை அறியப்படுகின்றன. குறைவாயிருப்பவை நிறைவாக்கப்படுகின்றன. அவனியில் சமத்துவம், சகோதரத்துவம் உடைய ஓர் அன்பியச் சமூகம் உருவாகி ஆண்டவரின் ஆட்சி மலர அடிகோலப்படுகின்றது.

நமது மறைமாவட்ட திருப்பயணத்தலங்களில் ஒன்றான, பறப்பாங்கண்டல் தூய கூட்டத்து மாதா பேராலயம் தூய யோசேவாஸ் முனிவரோடு தொடர்புடையதாகும். இதற்கான வரலாற்றுச் சான்றுகள் இங்கு புலவுண்டு. முனிவரின் காலத்தில் இவ்வாலயம் ஈழத்தின் தலைமைக் கோயிலாகவும், ஓரற்றோறியன் சபைக்குருக்களின் பணித்தளமாகவும், ஆயரில்லமாகவும் மிளிர்ந்துள்ளது. இக்கோயிலில் இருந்துதான் புனிதரின் பணிப்புரைக்கமைய யாக்கோமே கொண்சால்வேஸ் அடிகளார் முதன்முதலில் கத்தோலிக்க நாடகக் கலையைத் தொடங்கி வைத்தார். இப்பேராலயத்தை மன்னார் மறைமாவட்டத்திலுள்ள 42 கிராமங்களில் வாழும் குருகுல மரபைச் சேர்ந்தபொதுநிலையினர் 150 ஆண்டுகளுக்கு மேலாக பொறுப்புடன் கண்காணித்து, நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

குருகுல சமூகத்தைச் சேர்ந்த 29 கிராமங்களில் வாழும் கத்தோலிக்க மெதடிஸ்த இறைமக்கள் இணைந்து, முருங்கன் சுண்டிக்குளி விறாஸ் மொத்தம் கபிரிகேல் புலவரினால் எழுதப்பட்ட ‘சந்திரகாசன் நாடகம்’ எனும் மூன்று இரவுக்கதை, கடந்த புரட்டாசி மாதம் 17, 18, 19ஆம் திகதிகளில் பறப்பாங்கண்டல் பங்குத்தந்தை அருட்திரு. கொட்வின் கமிலஸ் சனா (தி.ச) அவர்களின் வழிகாட்டலின்கீழ் அரங்கேற்றம் செய்யப்பட்டது. இந்நாடகத்தை நல்லமுறையில் நிகழ்த்த வல்ல இறைவன் அருள்பாலித்தார். இது ஒரு கூட்டுச் செயற்பாடு, ஒற்றுமையின் அன்பிய அடையாளம்.

இக்கலை நிகழ்வில் மன்னார் மறைமாவட்ட திருத்தூதுப் பரிபாலகர் ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை முதன்மை விருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக திருவுளச்சபை மாகாண முதல்வர், குருமுதல்வர், கலையருவி இயக்குனர், நாடாளுமன்ற, மகாசபை உறுப்பினர்கள், பௌத்த சமய முருங்கன் விகாராதிபதி, மறைமாவட்ட அருட்பணியாளர்கள், துறவோர், அரச அதிகாரிகள், காவல்துறைப் பொறுப்பாளர்கள், ஊடகவியலாளர்கள், கிழக்குப் பல்கலைக்கழக கலைப்பீட விரிவுரையாளர்கள் என்போர் கலந்து சிறப்பித்தனர்.

இது மன்னார் மறைமாவட்டத் திருச்சபையின் ஒருங்கிணைந்த கலைவழி நற்செய்தி அறிவிப்புப் பணியின் வெளிப்பாடாகவும், சிறந்த எடுத்துக்காட்டாகவும் அமைந்தது. இந்நாடக நிகழ்வுக்கான பயிற்சிக்காலம் தொடக்கம், அரங்கேற்றம் முடிந்து பந்தர் விருந்துவரை நடைபெற்ற அனைத்து நிகழ்வுகளும், மாதோட்ட நாடகக் கலை மரபை உலகுக்கு எடுத்துக்காட்டும் பொருட்டு, கிழக்குப் பல்கலைக்கழக நாடகத்துறையினரால் ஆவணப்படமாக ஒளிப்பதிவு செய்யப்பட்டது.

மன்னார் மாதோட்டத்தைச் சேர்ந்த பல கலைஞர்களையும், கலைவிருது பெற்றவர்களையும், புலவர்களையும், கலையருவி இயக்குனரையும், அருட்பணியாளர்களையும், பல்கலைக்கழகக் குழுவினர் நேர்காணல் நடாத்தி, கூறிய கருத்துக்களை ஒலி, ஒளிப்பதிவாக்கம் செய்துள்ளனர். இப்பதிவுகளை மேற்கொண்ட பல்கலைக்கழக சமூகத்தினர் யாவரும் கிறீஸ்தவர்கள் அல்லாதோர் என்பது குறிப்பிடத்தக்கது. இறையாட்சிப்பணியில் இறைவன் பிறமறையினரையும் நற்செய்திப் பணியில் தம் கருவிகளாக்கப் பயன்படுத்தியுள்ளார். இது மகிழ்ச்சியானதும், சிந்தனைக்குரியதுமாகும். இந்நற்செய்திப்பணிச் செயல்கள் யாவும், விரைவில் இவர்களால் நம் மறைமாவட்ட கலைவழி நற்செய்திப்பணியின் ஆவணப்படமாக வெளியிடப்படும். இதனால் விளையவிருக்கும் அருள்நலன்கள் எவை என்பதற்கு, வருங்காலம் நல்ல பதிலைத் தரும். இது நம் அன்புக்கடவுளால் ஆகும். நாமும் நம்மால் இயன்றவகையில் நற்செய்திப்பணியாளராகி, இயேசுவின் மீட்பை இந்நிலமீது பறைசாற்றுவோமாக.

**மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்**
வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, ‘MANNA’
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782

## இல்லற வாழ்வில் 25வது ஆண்டு வெள்ளி விழா வாழ்த்து !



இருபத்தைந்து ஆண்டுகளாய்
இல்லறத்தின் நல்லறமாய்
இனிமையான இன்னிசையாய்
வாழ்ந்தீர்கள்.
ஆண்டவனின் பரிசாக இரு புதல்வர்
ஓர் புதல்வி பெற்றீர்கள்.

இறைவன் இயேசுவின் இனிய வழியில்
இதமாய் பிள்ளைகளை வழிநடத்தினீர்
இன்பமுடன் இன்னும் பல்லாண்டுகள்
இணைந்து வாழ்ந்திடுவீர்.

நம்பிக்கையாய் நல்மனதுடன் நிறைவு
செய்யும் நல்லதோர் வெள்ளிவிழா!
ஆண்டவனின் துணையோடு,
பல்லாண்டுகள் வாழ்கவென!
மனதார வாழ்த்துகிறோம்.

### திரு. திருமதி. அன்ரன் எட்வீசம்மா

(பெரியமுறிப்பு, பெரிய குஞ்சுக்குளம்)

**1992.10.28 - 2017.10.28**

வாழ்த்துவோர் :
பிள்ளைகள்
அ. அட்வின் அஞ்சலோ
அ. அக்னேஸ்,
அ. அருள்பிரகாஷ்

## இல்லற வாழ்வில் 50வது ஆண்டு பொன்விழா வாழ்த்து !



இல்லறம் என்னும் நல்லறத்தில்
இன்புற்று இறை ஆசியுடன்
50 ஆண்டுகள் நிறைவுற்று
பொன்விழாக் கண்டீரே!
பிள்ளைச் செல்வங்கள் ஆறினைப்
பெற்று சீருடனும், சிறப்புடனும்
அருமையாய் வளர்த்திட்டீரே!
வங்க மண்ணில் மங்காப் புகழுடன்
ஏழ்மையிலும் எளிமையாய்,
வறுமையிலும் செம்மையாய்
வளர்த்திட்டீரே!
பிள்ளைகட்குக் கல்வியுடன்
ஒழுக்கத்தையும் ஊட்டி
நன்நிலைக்கு உயர்த்திட்டீரே!
இன்னும் பல்லாண்டு சீருடனும்
சிறப்புடனும் வாழ புனித ஆனாள்
அன்னையின் கமல பாதம்
வேண்டுகின்றோம்.

### திரு. திருமதி. யேசு மனோகரன் றெவல், அஞ்சலா குரூஸ்

(4ம் வட்டாரம், வங்காலை)

**1968.11.08 - 2017.11.08**

**வாழ்த்துவோர் :**
**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்**
**உறவினர்கள்.**

# நீங்காத நினைவுகள்

## 03ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 01 11 1954 — உதிர்வு 16 11 2014



### திருமதி. வின்சென்ரியா வயலற் செலஸ்ரின் டயஸ் (வயலற்)

(ஓய்வுபெற்ற இலங்கை வங்கி ஊழியர், மன்னார் கிளை - மூர்வீதி, மன்னார்)

**“ஆண்டவரே எங்கள் வாழ்நாட்களைக் கணித்திட எங்களுக்குக் கற்பியும். அப்பொழுது ஞானமிகு உள்ளத்தை நாம் பெற்றிடுவோம்” (தி.பா.90:12).**

நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து இரண்டாண்டு கடந்தாலும் உங்கள் நினைவோ எம்மைவிட்டு ஒருபோதும் பிரிவதில்லை. அன்பார்ந்த தாயே! எம் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் உங்களது விண்ணுலக வாழ்வுக்காக இறைவனிடம் இரந்து நிற்கின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்:** அன்புக் கணவன், அருமைப் பிள்ளைகள், உற்றார், உறவினர்.

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 18 04 1942 — உதிர்வு 17 11 2016



### திரு. தம்பிராசா சீவியரெட்ணம்

(முருங்கன்பிட்டி, முருங்கன்)

மண்ணக வாழ்வுதனை நிறைவுசெய்து விண்ணக வாழ்வை நோக்கிப் பயணித்திருக்கும் எங்கள் பாசம் நிறைந்த தந்தையே! அப்பா, உங்களின் முகம் பார்க்கவும் உங்களின் குரலினைக் கேட்கவும் ஏங்கித் தவித்து நிற்கின்றோம். எங்கள் உள்ளங்களின் வேதனைகள் உங்களுக்குத் தெரிகின்றதா? அப்பா என்ற சொல்லின் அர்த்தத்தை உங்கள் அன்பு நிறைந்த அரவணைப்பில் கண்டுணர்ந்தோம். எங்கள் வாழ்வின் முழுமையே நீங்கள்தானே! அப்பா நீங்கள் எங்கள் ஒவ்வொருவரதும் உயிர் மூச்சாக வாழுகின்றீர்கள். எத்தனை ஆண்டுகள் கடந்து சென்றாலும் எங்கள் உள்ளங்களில் நிறைந்து வாழ்வீர்கள். அப்பா உங்கள் ஆன்மா ஆண்டவரின் சந்நிதியில் நித்திய இளைப்பாறுதல்பெற வேண்டுகிறோம்.

**பிரிவால் நினைந்துருகும்,**
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 12ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 10 1934 — உதிர்வு 18 11 2005



### திருமதி. பேதிரு செபமணி அருளம்மா

(முருங்கன் கமம், முருங்கன்)

**“இயேசுவுக்குள் நித்திரை அடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூடக் கொண்டுவருவார்” (1 தெசலோனிக்கேயர் 4:14)**

ஆண்டுகள் பன்னிரண்டு கழிந்தபோதும்
ஆறாக் காயமாய் எம் மனத்திரையினிலே
நிழலாய் வந்துபோகும்
உங்கள் நினைவலைகள்
எம்மைவிட்டு என்றும் நீங்காது.

**பிரிவால் நினைந்துருகும்**
அன்புக் கணவன் பேதுரு, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## 02ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 28 01 1995 — உதிர்வு 05 11 2015



### ப. ஜேன் போள் சோசை (ஜெனி)

(வங்காலை, மன்னார்)

சிதைந்து போனோமே - ஐயா! நீ
விதைத்துப்போன மரண விதியால்
புதைந்து போனது உன் நினைவுகள் மட்டுமல்ல
நாங்களும்தான் மகனே! - உன்
தடம் புரண்ட கால் சுவடுகளை
ஈராண்டுகளாய் ஏக்கமுடன் தேடுகின்றோம்!
இமையமாவாய் என்றிருந்தோம் - கண்
இமைக்கும் பொழுதிலே காணாமல் போனாயே!
அழியா உன் நினைவுகளை - கண்ணீரால்
அழிக்க முடியாது செல்வமே!
அமைதியில் இளைப்பாறு - எம்
ஆன்மாவும் உன்னோடுதான்.
சாந்தி, சாந்தி, சாந்தி!

**பிரிவால் நினைந்துருகும்** - குடும்பத்தினர்.

## 31ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 01 04 1938 — உதிர்வு 05 10 2017



### திருமதி. சேசுபுஸ்பம் அந்தோனிப்பிள்ளை

(சூரியகட்டைக்காடு, நானாட்டான்)

கருவறையில் உயிர் தந்த எங்கள் அம்மா!
ஆசையாய் அன்பு முத்தங்கள் சொரிந்த அம்மா!
உம் பாச மழையில் நனைந்து வளர்ந்தோம் அம்மா!
துன்பத்தை நாம் உணராதிருக்க சுமைதாங்கிய அம்மா!
தோள்மீது சுமந்து ஆராரிரோ பாடியதாரோ...
இன்று தூங்கிப் போனதாரோ.... அம்மா.
உம் பிள்ளை என் தோள்மீது சாய்ந்து துயில்கொள்ள
நினைத்தது என் கடன் தீர்க்கவா அம்மா.
சொல்வற்கு மொழிகள் இல்லை, வார்த்தைகள் இல்லை.
ஆன்மா இறைவனில் இளைப்பாற வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்** - மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்.

## 05ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 24 12 1958 — உதிர்வு 22 11 2012



### திரு. நோயல் ராஜநாதன் பொன்ராஜா (பிரான்ஸ்)

எங்கள் மனதை என்றும் விட்டுவிலகாத
எங்கள் அன்புத் தெய்வமே அப்பா!
எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டுகள் ஐந்து ஆனாலும்
எம் உள்ளத்தின் துயரம் இன்னும் ஆறவில்லையே!
நித்தம் ..... நித்தம்... உம் நினைவுகள்
எம்மைத் துயரத்தில் ஆழ்த்துகின்றது.
ஆண்டவர் பாதம் நீங்கள் அமர்ந்திருக்க
எந்நாளும் எம் செபத்தில் வேண்டுகின்றோம்.

(22.11.2017 அன்று மாலை 5.00 மணிக்கு மன்னார் புனித செபஸ்தியார் ஆலயத்திலும், காலை புனித மரியன்னை ஆலயத்திலும் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.)

**பிரிவால் நினைந்துருகும் :** மனைவி, பிள்ளைகள்.